
ஸ்ரீ ராமகிருஷ்ண விஜயம்



திருமலை திருப்பதி தேவஸ்தானம், திருப்பதி

ஸ்ரீவேங்கடேசப் பெருமாள் ஊஞ்சல் சேவை

ஸ்ரீவேங்கடேசப் பெருமாள் எல்லாக் குணங்களையும் அவஸ்தைகளையும் கடந்து விளங்குகிறார். அவர் அவற்றால் பாதிக்கப்படவில்லை; அவைகள் அவரைப் பாதிக்கவும் முடியாது. ஆனால், பக்தர்கள் அந்த ஒப்பற்ற பரம்பொருளைத் தங்கள் உள்ளத்திலேயே உணர்ந்து அனுபவிக்கிறார்கள். ஆகையால் பக்தர்கள், ஸ்ரீவேங்கடேசப் பெருமாள் எப்போதும் உற்சாகமாகவும் சந்தோஷமாகவும் கவலையற்றும் இருந்து, தங்களுக்கு எல்லா விதமான சௌகரியங்களையும் சௌபாக்கியங்களையும் க்ஷேமங்களையும் கொடுத்துக்கொண்டிருக்க வேண்டுமென்று விரும்புகிறார்கள்.

இதுதான் திருமலையில் கண்ணாடி ஹால் எனப்படும் அயன மஹாலில் நாள்தோறும் நடத்தப்படும் ஊஞ்சல் சேவையின் தாத்பரியமாகும். இந்தச் சேவை ஒவ்வொரு நாளும் மாலையில் ஆறு மணிக்குப் பிறகு நடந்து வருகிறது. உற்சவமூர்த்தி அழகாக அலங்கரிக்கப்பெற்ற ஊஞ்சலில் தம் தேவிமார்களுடன் எழுந்தருளுகிறார். கந்தம், சாமர உபசாரங்கள், வேதபாராயணம், பஜனை ஆகியவற்றுடன் ஸ்வாமி லேசாக ஊஞ்சல் ஆடுகிறார்.

மேற்கண்ட ஊஞ்சல் சேவை உற்சவத்தில் பங்குகொள்ள விரும்பும் கிருகஸ்தர்கள் ரூ. 1000 செலுத்தித் தங்கள் குடும்பத்தில் ஆறு பேர்களுடன் இந்த உற்சவத்தில் கலந்துகொள்ளலாம். அவ்விதம் உற்சவத்தில் பங்குகொள்ளும் கிருகஸ்தருக்கு ரூ. 250 பெறுமானமுள்ள தங்க டாலரும் வஸ்திர வெகுமதியும் அளிக்கப்படும்.

எக்ஸிக்யுட்டிவ் ஆபீசர்,

திருமலை திருப்பதி தேவஸ்தானம், திருப்பதி.

ஸ்ரீராமகிருஷ்ண விஜயம்

தொகுதி 61	செப்டம்பர் — 1981	இதழ் 9

பொருளடக்கம்



பொன்மொழிகள்

தீண்டாமையை அகற்றுவோம்!

என்னைப் பொறுத்தவரையில் தீண்டாமை என்பது ஹிந்துமதத்தின் உயிர்ப் பிரச்னை. நான் மீண்டும் மீண்டும் கூறி வந்துள்ளது போல் தீண்டாமை நீடித்தால் ஹிந்துமதம் அழியும். ஆனால் ஹிந்து உள்ளத்திலிருந்து தீண்டாமையை வேரோடு பறித்தெறிந்தால் ஹிந்து மதம் உலகிற்குச் சிறந்த வழி காட்டும். இதில் முற்பகுதியை நான் நூற்றுக்கணக்கான கூட்டங்களில் கூறி வந்துள்ளேன், பிற்பகுதியைச் சொல்லவில்லை. இப்போது அது உண்மையைக் கடவுள் என்று ஒப்புக் கொண்டுள்ள ஒருவரின் வார்த்தையேயாகும். இதில் மிகை ஏதுமில்லை.

—மகாத்மா காந்தி

ஸ்ரீ ராமகிருஷ்ண விஜயம்

ஒன்றே குலமும் ஒருவனே தேவனும்
நன்றே நினைமின் நமன் இல்லை

— திருமூலர்

தொகுதி 61	துர்மதி ஸூ புரட்டாசி மீ	இதழ் 9



अजं रुक्मिणी-प्राण-सञ्जीवनं तं परं धाम कैवल्यमेकं तुरीयम् ।
प्रसन्नं प्रपन्नार्तिहं देवदेवं परंब्रह्मलिंगं भजे पाण्डुरंगम् ॥

அஜம் ருக்மிணீ-ப்ராண-ஸஞ்ஜீவனம் தம் பரம் தாம கைவல்ய-மேகம் துரீயம் |
ப்ரஸன்னம் ப்ரபந்நார்த்திஹம் தேவதேவம் பரம்ப்ரஹ்ம-லிங்கம் பஜே பாண்டுரங்கம் ||

— ஸ்ரீபாண்டுரங்க அஷ்டகம்

பிறப்பற்றவரும் ருக்மிணியின் பிராணநாதரும், ஒப்பற்றவரும், மோட்ச சொரூபியும், மும்மூர்த்திகளுக்கு அதீதமானவரும், சாந்தமான முகத்தோடு கூடியவரும், தம்மை அண்டினவரின் கஷ்டத்தைப் போக்குபவரும், தேவர்களுக்கும் தேவருமாகிய ஸ்ரீபாண்டுரங்கனைப் பூஜிக்கிறேன்.

சூரியனும் சந்திரனும் உனக்குத் தீபம்;
சூழும் அண்டவெளி உனக்கு நிவேதனத்தை

நேரும் ஒரு பொன்தாலம்; அதிற் பதித்த
நன்முத்தே நீள்வானில் நிறையும் மீனம்;

வாரிமணம் வீசும் சந்தன மரத்து
வாசனையே நீ மகிழும் தூபம்; எங்கும்

ஊரும் காற்று உன் கவரி; எல்லாக் காடும்
ஒளிவேந்தே, உன் பூசைக் குகந்த பூக்கள்.

—குரு நானக்

இஸ்லாமியர் நடத்தும் மதமாற்றம்
ஹிந்து மதத்திற்கு ஒரு சவால்

சுவாமி புதானந்தர்,
காரியதரிசி, ஸ்ரீராமகிருஷ்ண மிஷன், தில்லி.

ஆகஸ்ட் 10-ஆம் நாள் 'இண்டியன் எக்ஸ்பிரஸ்' நாளிதழில் வெளிவந்த சுவாமி புதானந்தரின் கட்டுரை இங்கே சற்று விரிவுபடுத்தித் தரப்படுகிறது.

மத்திய மாநில அரசுகள், பாராளுமன்ற மற்றும் சட்டமன்ற உறுப்பினர்கள் சிந்திக்க வேண்டியவை

கடந்த சில மாதங்களாக நடந்து வரும் ஒட்டு மொத்த மதமாற்றம் ஒரு பலமுனைப் பிரச்னை யாகும். அதற்கு ஒரு நிரந்தரமான முடிவு காண உடனடியான, புத்திபூர்வமான மற்றும் தீவிரமான நடவடிக்கை மேற்கொள்ளப்பட வேண்டும்.

அவசரப்பட்டுப் பயங்கொள்ளித்தனமாக நீதி யற்ற நடவடிக்கையை மேற்கொண்டால் அது தோல்வியடையும்.

ஆகையினுல், இந்தப் பிரச்னை ஆழ்ந்து ஆராயப்பட வேண்டும்.

பாரதத்தில் மத்திய மற்றும் மாநில அரசுகள், சிறுபான்மையினரான கிறிஸ்தவ, இஸ்லாமிய உரிமைகளுக்கும் உணர்ச்சிகளுக்கும் அளவு கடந்த மதிப்புக் கொடுக்கின்றன என்பது அனைவரும் அறிந்ததுதான்.

பெரும்பான்மையினரான ஹிந்து சமுதாயத் தினருக்கும் உரிமைகளும் உணர்ச்சிகளும் உண்டு என்பதை அரசாங்கம் உணர்ந்துகொள்ள வேண்டும்.

இப்போதைய மதமாற்றப் பிரச்னைக்கு ஒரு தீர்வு காண வேண்டுமானுல் இதை மனக் கிளர்ச்சியைத் தூண்டிவிடும் போக்கிலிருந்தும் அரசியலிலிருந்தும் மிகவும் கவனமாகப் பிரித்துக் காண வேண்டும். பாரதத்தில் அரசியல் என்பது பிரச்னைகளின் உறைவிடமாகும். ஒட்டு மொத்த மதமாற்றப் பிரச்னையை ஓர் அரசியல் பிரச்னையாக மாற்றிவிடக் கூடாது என்கிற விஷயத்தில் அனைத்து அரசியல் கட்சிகளும் ஒருமித்த ஒரு தேசியக் கருத்தைக் கைக் கொள்ள வேண்டும்.

சென்னையைச் சார்ந்த ஒரு நண்பர் 1-6-1981 அன்று எழுதியுள்ள ஒரு கடிதத்தில் கூறுகிறுர்: "......ஹரிஜனங்கள் அனுபவித்துக்கொண்டு வந்துள்ள துன்பங்கள் காரணமாகத்தான் மதம் மாறுகிறுர்கள்; அவர்கள் ஒட்டுமொத்த மாக மதம் மாறியதில் தவறில்லை என்கிற ஒரு மித்த கருத்து அனைத்து அரசியல்வாதிகளுக்கும் இருப்பது போல் தெரிகிறது."

எப்பொழுதுமே நடக்க முடியாததாக இருந் துள்ள ஒன்றை நடக்கக் கூடியதாக்குவதற்கு அதாவது, எந்த விதத்திலும் சரியில்லாத ஒரு நிகழ்ச்சியில் ஏதுமே தவறில்லை என்று அரசியல் வாதிகள் ஒருமித்த குரலில் கூறுவதற்கு—ஒரே ஒரு நிர்ப்பந்தம்தான் உள்ளது. அந்த நிர்ப் பந்தம் என்ன என்பது அனைவரும் அறிந்ததே ஆகும்.

ஒட்டுமொத்த மதமாற்றத்தில் எந்தவிதத் தவறும் இல்லை என்று அனைத்து அரசியல்வாதி களும் ஒருமித்த மனதுடன் கூறவேண்டுமானுல் அவர்கள் சிந்திக்காமலேயே பேசுகிறுர்களா அல்லது கீழ்த்தரமாகச் சிந்தித்துப் பேசு கிறுர்களா?

அரிஜனங்களுக்கு ஏற்பட்டுள்ள துன்பங்கள் உண்மையானவைதாம். அப்படியென்றுல் முதலாவதாக, முடியுமோ முடியாதோ எதைச் செய்தாகிலும் அவர்களுடைய துன்பத்தைப் போக்க வேண்டும். மற்ற மனிதர்களைப் போலவே கௌரவமாகவும் நம்பிக்கையுடனும் அவர்கள் வாழ்வதற்கு முழுமையான வாய்ப்பை ஏற்படுத்தித் தர வேண்டும். அதற்குப் பதிலாக

அவர்கள் தொன்றுதொட்டு வேரூன்றி வளர்ந்துள்ள சூழ்நிலையிலிருந்து அவர்கள் ஏன் பறித்து அகற்றப்பட வேண்டும்? அரிஜனங்களுடைய ஒவ்வொரு பிரச்னைக்கும் ஹிந்து மதத்திலேயே முடிவுகாண முடியும். இந்த முடிவைக் காண அரசியல்வாதிகள் ஏன் முனைவதில்லை?

மேலும், அரிஜனங்களுக்கு இருப்பது போன்ற துன்பங்கள் அனைத்து மதத்தவர்களுக்கிடையேயும் காணப்படுகின்றன. இன்று பாரதத்தில் மதமாற்ற வேலையில் ஈடுபட்டுள்ளவர்களுடைய உற்சாகம் ஹிந்துக்களையும் தொற்றிக்கொண்டு அவர்களும் ஒட்டுமொத்தமாக முஸ்லிம்களையும் கிறிஸ்தவர்களையும் மதமாற்றத் தொடங்கினால் பாரதத்தில் அமைதியும் செழிப்பும் என்னவாகும்? இஸ்லாமியரிடமிருந்தும் கிறிஸ்தவரிடமிருந்தும் ஹிந்துக்கள் ஒரு சில பாடங்களைக் கற்றுக் கொள்ள மாட்டார்கள் என்று ஏன் கருத வேண்டும்? ஆகையினால் இன்றைய சூழ்நிலை ஆழ்ந்து சிந்திக்க வேண்டிய ஒரு விஷயமாகும்.

அரிஜனங்களுடைய குறைகளைப் போக்குவதற்காக மனிதாபிமான உணர்வுடன்தான் ஒட்டுமொத்த மத மாற்றங்கள் நடைபெறுகின்றன என்று கருதுவது சிறுபிள்ளைத்தனமாகும். மீனாட்சிபுரத்தில் புதிதாக மதமாறியவர்களுக்குப் போதிக்கப்பட்ட முதற் பாடம் குடும்பக் கட்டுப்பாடு ஒரு தீமையாகும் என்றும், அதைக் கடைப்பிடிக்கக்கூடாது என்பதுமாகும். குடும்பக் கட்டுப்பாட்டின் நன்மை தீமை பற்றிக் கருத்து வேறுபாடு இருக்கக்கூடாது. இஸ்லாமிய ஆட்சி நடைபெறும் பாகிஸ்தானிலும் மற்ற இஸ்லாமிய நாடுகளிலும் மக்கள் தொகையைக் கட்டுப்படுத்தப் பெருமுயற்சிகள் நடக்கிறபொழுது, பாரதத்தில் ஒட்டு மொத்த இஸ்லாமிய மதமாற்ற வேலைத் திட்டத்தின் கீழ் ஒரு பிரிக்க முடியாத அம்சமாக இஸ்லாமியரின் உற்பத்திக்கு ஊக்கம் அளிக்கப்படுவது ஏன் என்பதைப் புரிந்து கொள்வதற்குப் பெரிய புத்திசாலித்தனம் தேவையில்லை.

நம்பகமான புள்ளி விவரங்களைச் சற்றுப் பரிசீலித்தோமானால் நாம் இங்கே சுட்டிக் காட்டுவது என்ன என்பது தெளிவாகும்.

1961 மற்றும் 1971-ஆம் ஆண்டிற்கான மக்கள் தொகைக் கணக்கெடுப்புகளை ஒப்பிட்டுப் பார்க்கும்பொழுது பாரதத்திலுள்ள ஹிந்து மக்களின் எண்ணிக்கை 23.63 சதவீதம் அதிகரித்துள்ளபொழுது, முஸ்லிம்களின் எண்ணிக்கை 32.58 சதவீதம் அதிகரித்துள்ளது. 1981-ஆம் ஆண்டு மக்கள்தொகைக் கணக்கெடுப்பின் அறிக்கை 1982 ஜூலை இறுதியில் வெளிவரும்பொழுது மேலும் அதிகமான அளவில் இவர்களுடைய எண்ணிக்கை உயர்ந்திருக்கும் என்பது நிச்சயம்.

மறைக்க முடியாத அரசியல் நோக்கங்களுடன் பாரதத்தினுடைய மக்கள்தொகை நிலவரத்தில் மாற்றம் ஏற்படுத்துவதற்கு ஒட்டு மொத்த மதமாற்றமும் மக்கள் உற்பத்தி ஊக்கமும் இஸ்லாமியர்களால் பயன்படுத்தப் பட்டால் அதன் விளைவாக இயற்கையாகவே ஏற்படக்கூடிய கொந்தளிப்பு அடக்க முடியாததாகப் போய்விடலாம்.

1981 ஜூலை 6-ஆம் தேதி புதுதில்லியிலிருந்து வெளியாகியுள்ள செய்திப்படி மத்திய அரசு தமிழ்நாட்டின் நான்கு மாவட்டங்களில் நடைபெற்று வரும் ஒட்டுமொத்த மதமாற்றம் குறித்துத் தீவிரக் கவனம் செலுத்துகிறது என்று தெரிய வந்துள்ளது மகிழ்ச்சிக்கு உரியதே. மத்திய உள்துறை அமைச்சர் திரு ஜையில்சிங் இது விஷயமாகத் தமது அமைச்சரவையின் ஆலோசனைக் குழுக் கூட்டத்தில் பேசியபொழுது உறுப்பினர்களிடம், "சுதந்திர இந்தியாவில் எந்த ஒரு குடிமகனும் சுதந்திரமாக எந்த ஒரு மதத்தையும் ஏற்றுக்கொள்ளவோ கடைப் பிடிக்கவோ பிரசாரம் செய்யவோ அடிப்படையான உரிமையைப் பெற்றிருக்கிறான்" என்று கூறியதாகத் தெரிகிறது.

ஆனால் எந்த ஒரு மதத்தையும் ஏற்றுக் கொள்வதற்கோ கடைப்பிடிப்பதற்கோ அல்லது பிரசாரம் செய்வதற்கோ உள்ள உரிமைக்கும், ஒட்டுமொத்தமாக மதமாற்றுவதற்கான உரிமைக்கும் உள்ள வேறுபாடு மிகமிகப் பெரிது என்பது தெளிவாக அறிந்துகொள்ள வேண்டிய, நினைவுறுத்த வேண்டிய ஒன்றாகும்.

சுருங்கச் சொன்னால் இந்த ஒட்டுமொத்த மதமாற்றத்திற்கு அரசியல் சட்டத்தில் அங்கீகாரம் கிடையாது. மற்றும் இது சட்டத்திற்குப் புறம்பானதும் ஆகும்.

தமிழ்நாட்டில் இன்று நடைபெற்று வருவது இஸ்லாமிய சமயப் பிரசாரமே அல்ல. பெரும்பான்மைச் சமூகத்தினரின்மீது சிறுபான்மைச் சமூகத்தினர் புரிந்துள்ள துணிகரமான ஓர் அரசியல் கைகூலித்தனம்தான் இது. இப்போது தீவிரமாக மதமாற்றத்தில் ஈடுபாடு கொண்ட இஸ்லாம் சமயம் பாரத வரலாற்றில் எப்படி இடம் பெற்றுள்ளது என்பதை யாவரும் அறிவர். வெளிநாடுகளிலிருந்து வரும் பெருத்த நிதியுதவியுடன் முஸ்லிம்கள் பெருமளவில் ஒட்டுமொத்த மத மாற்றங்கள் நடத்தும் பொழுது பாரத அரசு இந்த விஷயத்தை உடனடியாகவும் கூர்ந்தும் கவனிக்கப் பெரிதும் கடமைப்பட்டுள்ளது.

ஒட்டுமொத்த மதமாற்றம் எதிர்மறையிலான ஒட்டுமொத்த மத மாற்றத்திற்கு இட்டுச் செல்லும் என்பதைக் கூற ஒரு தீர்க்க தரிசி தேவையில்லை. ஹிந்து சமூகத்திலுள்ள பேராற்றல் படைத்த சக்திகள் தலைதூக்கி அதன் விளைவுகளை ஏற்படுத்தும்.

ஆகையினால் மத்திய அரசு செய்யக்கூடிய புத்திபூர்வமான காரியம், இந்த மதமாற்றத்திற்கு வழிவகுத்த அரிஜனங்களுடைய சமூகக் குறைபாடுகளைக் கண்டறிந்து அவற்றைப் போக்குவதற்கான நடவடிக்கைகளை மேற்கொள்வதேயாகும். இந்த விஷயத்தைப்பற்றி ஆழ்ந்து ஆராயும்பொழுது பாரதத்தில் சட்டப்படி குற்றமாகக் கருதப்படுகிற தீண்டாமைக் குறித்துச் சட்டம் மற்றும் ஒழுங்கை நிலைநாட்டும் அதிகாரிகள் முறையாகவும் தேவையான அளவும் நடவடிக்கைகளை மேற்கொள்ளவில்லை என்பதை அவர்கள் அறிந்துகொள்ளக் கூடும். அதுமட்டுமல்ல, அரிஜனங்களுக்குப் பாதுகாப்பு அளிக்க வேண்டியவர்களிடத்திலிருந்தே அவர்களுக்குப் பெரும் துன்பம் ஏற்பட்டுள்ளதையும் பார்க்க முடியும். துன்பத்திற்கு ஆளாகியுள்ள அரிஜன மக்களுடைய கஷ்டங்களைப் போக்குவது குறித்து மாநில அரசு உறுதியளிக்க வேண்டும்.

மத்திய அரசு இது விஷயமாக விசாரணை மேற்கொள்ளும்பொழுது இந்த ஒட்டுமொத்த மத மாற்றங்கள் முடிவு பெற்ற உண்மைகளாகும் என்கிற நிலையில் இந்த விசாரணையைத் துவக்கக் கூடாது. இந்த மத மாற்றங்கள் தாற்காலிகமாக ஏற்பட்டுள்ள ஒரு நிலை மாற்றந்தான். இது அரசியல் சட்டத்தின் அங்கீகாரம் உடையதா என்பது பிரச்னைக்கு உரியதாகும். ஆகையினால் இவற்றைச் சட்டப்படி அகற்ற வேண்டும். நாட்டின் சட்டம் இவற்றை அங்கீகரிக்கக் கூடாது. மதமாற்றப்பட்டவர்கள் கௌரவமான விதத்தில் தாய் மதம் திரும்புவதற்குப் புத்திபூர்வமான வழிமுறைகளைக் காண வேண்டும்.

இந்த ஒட்டுமொத்த மதமாற்றத்தில் வெளிநாட்டுப் பணம் எந்த அளவுக்கு விளையாடியுள்ளது என்பது பற்றிய புலனாய்வு பலன் தரலாம், தராமலும் போகலாம். அரசாங்கம் இந்த விஷயத்தில் செய்யக்கூடிய ஒரே காரியம், இந்த ஒட்டுமொத்த மத மாற்றத்திற்குச் சட்டத்தின் அங்கீகாரம் அளிக்க மறுப்பதும் 'மதமாற்றப்பட்டவர்கள்' தாய்மதம் திரும்புவதைச் சட்டபூர்வமான நடவடிக்கை என்று வலியுறுத்துவதுமாகும். இது ஒட்டுமொத்த மதமாற்றத்தை ஒரு பயனற்ற திட்டமாக்கும். பெரும்பான்மைச் சமூகத்தினர் உட்பட அனைத்துச் சமூகத்தினருடைய உரிமைகளையும் பாதுகாக்கக்கூடிய ஒரு சமயச் சார்பற்ற அரசாங்கம் நீதிபூர்வமாக எடுத்துக்கொள்ளக் கூடிய ஒரு நேர்மையான நடவடிக்கையாகும் இது.

பாரதத்திலுள்ள ஹிந்துக்களுக்கு ஒரு செயல்திட்டம்

தென்னாட்டில் நடைபெற்றுள்ள இந்த ஒட்டுமொத்த மத மாற்றங்கள் ஹிந்துக்களை இதுவரை அவர்கள் தங்கள் சமயத்தைச் சார்ந்தவர்களிடம் கொண்டிருந்த அக்கறையின்மையிலிருந்தும் ஹிந்து சமுதாயத்தின் ஒரு பிரிவினரிடையே காணப்படுகிற சீர்திருத்த எதிர்ப்பு மனப்பான்மையிலிருந்தும் தட்டியெழுப்பியுள்ளதென்றால் அந்த அளவிற்கு அவர்கள் முஸ்லிம் சகோதரர்களுக்கு நன்றி செலுத்த வேண்டும். ஆனால் ஹிந்துக்கள்

இப்போது மேற்கொள்ள வேண்டியது ஒரு செயல்திட்டமே தவிர எதிர்ப்புத் திட்டமல்ல. இதை நன்கு அறிந்து நினைவில் வைத்துக் கொள்ள வேண்டும்.

பாரதத்திலுள்ள ஹிந்துக்கள் செய்ய வேண்டிய முதலாவது காரியம் அவர்கள் ஒன்று பட்டு அமைதியான முறையில் ஒரு தேசியத் திருவிழாவைக் கூட்டி 'மதமாறியவர்களை' கௌரவமாகத் தாய்மதத்திற்குத் திருப்பி எடுத்துக்கொள்ள வேண்டும். இவ்வாறு நடை பெற, ஹிந்து சமுதாயத்தின் சமயத் தலைவர்கள் 'மதமாறியவர்களுக்கு'த் தாய்மதம் திரும்பக் கூட்டாகத்திறந்த அழைப்பு விடுக்க வேண்டும். ஒட்டுமொத்த மதமாற்றத்திற்கு ஆளான அனை வரிடையேயும் இந்த அழைப்பைக் குறித்து விரிவான பிரசாரம் செய்ய வேண்டும். அவர்கள் தாய்மதம் திரும்புகிற நிகழ்ச்சி எளிமை யாகவும் உயர்வு அளிப்பதாகவும் இருக்க வேண்டும்.

ஹிந்து சமய மடாதிபதிகள், இந்த ஒதுக்கப் பட்ட மக்கள் வாழ்கிற கிராமங்களுக்குச் சென்று, கோவில்களிலோ அல்லது மற்றச் சௌகரியமான இடங்களிலோ சென்று தங்கி, இந்த மக்களிடமிருந்து பிக்ஷைபெற்று அவர் களுக்கு அவர்களுடைய தாய்மொழியில் சமயச் சொற்பொழிவுகள் நிகழ்த்தி இந்த மக்களுக்கு உணர்ச்சியூட்டலாம். மற்ற மனிதர்களை நடத்துவது போல் இவர்களையும் மனிதர் களாகக் கருத வேண்டும். 'ஆத்மா புனித மானது' என்று வேதாந்தம் கூறுகிற உண்மை சமூக நடவடிக்கைகளில் பிரதிபலிக்க வேண்டும்.

நவீனகாலச் சூழ்நிலையில் ஹிந்து சமுதா யத்தை முழுமையாக ஒன்றுபடுத்துவதற்கும் லட்சக்கணக்கான தாழ்த்தப்பட்ட மக்களைத் தகுந்த முறையில் முன்னேற்றுவதற்கும் சுவாமி விவேகானந்தருடைய போதனைகள் உணர்ச்சி மிக்க, தவறுகளற்ற வழிகளைக் காண்பிக் கின்றன. இதுவரை மற்ற எப்போதும் இருந்ததைவிட இன்று அவரது அறை கூவலுக்குத் திடீரென்று ஒரு முக்கியத்துவம் ஏற்பட்டுள்ளது.

19-ஆம் நூற்றாண்டின் இறுதியில் சுவாமி விவேகானந்தர் அறைகூவல் விடுத்தார். "புனிதமான வாழ்க்கையின் விளைவாக எழும் உற்சாகத்தினால் எழுச்சி அடைந்தவர்கள்; கடவுளிடம் அழியாத நம்பிக்கை என்பதை அரணாகப் பெற்றவர்கள்; ஏழை எளியவர் களிடமும் தாழ்ந்தவர்களிடமும் ஒடுக்கப்பட்ட வர்களிடமும் கொண்ட இரக்கம் காரணமாகச் சிங்கத்தைப் போன்ற தைரியம் அடைந் தவர்கள்—இத்தகைய ஆண்களும் பெண்களும் நூறாயிரம் பேர் வேண்டும். இவர்கள் மோட்சம், பரோபகாரம், தாழ்ந்தவர்களின் முன்னேற்றம், சமூக சமத்துவம் ஆகிய இந்த உயர்ந்த கொள்கைகளைப் பிரசாரம் செய்தபடி இந்த நாட்டின் ஒரு மூலையிலிருந்து மற்றொரு மூலைவரை செல்வார்கள்.''

இன்று அரிஜனங்கள் விரும்புவது உலகாயத நலன்களைக்காட்டிலும் தங்களுடைய ஆன்மிக மான பிறப்புரிமைதான் என்பதை ஹிந்துக்கள் நன்கு உணர வேண்டும். அரிஜனங்கள் கோரும் அந்தப் பிறப்புரிமையை ஹிந்துக்கள் தவறாது வழங்க வேண்டும்.

அரிஜனங்களுடைய உலகாயத நலன்களைப் பாதுகாத்தும் அத்துடன் தாய்மதத்திற்குத் திரும்புகிற 'மதம் மாறியவர்களுக்கு'ப் பாது காப்பு அளிக்கவும், இயன்றது அனைத்தையும் ஹிந்துக்கள் செய்துதான் ஆகவேண்டும். மதம் மாறிய ஹிந்துக்களால் கடுமையாகக் குறை கூறப்பட்டுள்ள உயர்ஜாதியினர் இந்தப் பொறுப்பை ஏற்றுக்கொள்ள வேண்டும்.

ஹிந்து சமுதாயத்திலிருந்து தீண்டாமை, அது எந்த விதத்தில் இருந்தாலும், என்றென் றைக்குமாக, முழுமையாகத் துடைத்து நீக்க வேண்டிய பொறுப்பை ஏற்றுக்கொள்ள ஹிந்து இளைஞர்கள் முன்வர வேண்டும். பழைய பழக்க வழக்கங்கள் மற்றும் ஆழ்ந்த மூட நம்பிக்கைகளைக் கைவிட முடியாத நிலையில் இருக்கிற பழைய தலைமுறையினரைக் காட்டி லும் புதிய கண்ணோட்டமும் பரந்த மனப் பான்மையும் படைத்த இளைஞர்களால் இந்தத் துறையில் பெரும் சாதனைகளை ஏற்படுத்த முடியும்.

ஒருமித்த கிராம முன்னேற்ற வேலைகளின் ஒரு பகுதியாகத் தீண்டாமை ஒழிப்புப் பணி மேற்கொள்ளப்பட வேண்டும். விழாக் காலங்

களில் சமபந்தி போஜனம் ஏற்பாடு செய்து அதில் ஹிந்து சமுதாயத்திலுள்ள அனைவரும் ஒன்றாக அமர்ந்து உணவருந்துவது இந்தத் துறையில் ஒரு நல்ல முயற்சியாக அமையும்.

கடைசி நபர் வரை 'மதமாறியவர்கள்' அனை வருமே திரும்பி வரும் வரையில் ஹிந்துக்கள் தங்களது முயற்சிகளை இடையறாது தொடர வேண்டும். மீனாட்சிபுரத்துக் காளியம்மன் கோவில் திடலில் ஆண்டுதோறும் ஒரு ஹிந்துத் திருவிழாவைக் கூட்டுவது ஒரு நல்ல திட்ட மாகும். இந்தத் திருவிழாவில் மற்றச் சிறப்பு அம்சங்களுடன் சமயப் பெரியோர் வந்திருந்து தங்களது சொற்பொழிவுகள், பஜனை மற்றும் ஹரிகதா காலட்சேபம் போன்ற நிகழ்ச்சிகளை எளிய தமிழிலேயே நிகழ்த்தி மக்களுக்குச் சமய அறிவும் உணர்ச்சியும் ஊட்ட வேண்டும்.

மீனாட்சிபுரம் போன்ற ஹிந்து சமுதாயத்தி னுடைய பலவீனமான பகுதிகளை அடையாளம் கண்டு கொண்டு அது போன்ற பகுதிகளில் இஸ்லாமியருடைய இந்தச் சமயப் படையெடுப்பு நடைபெறாமல் இருக்கத் தேவையான நடவடிக் கைகளை மேற்கொள்ள வேண்டியது உடனடியாகக் கவனிக்கப்பட வேண்டிய விஷயமாகும். ஒழுக் கமும் கட்டுப்பாடும் மிகுந்த இளைஞர்களால் தான் இந்தப் பணியை மேற்கொள்ள முடியும்.

தெளிவான சிந்தனை, கூரிய மதியுடன் திட்டமிடுதல், மற்றும் சமர்ப்பண மனோபாவம் உடையவர்கள் தன்னலம் பேணாமல் இடை யறாது ஆற்றுகின்ற தொண்டு ஆகியவற்றின் அடிப்படையில்தான் இந்த வேலைகள் அனைத்தும் நடைபெற முடியும்.

மனித இனத்தின் மிகவும் தொன்மை வாய்ந்த ஹிந்து மதத்தினால் ஊக்குவிக்கப்பட்ட, மனிதர்களிலே சிறந்தவர்களாகத் திகழ்கிற வர்கள் ஏற்றுக்கொள்ளக்கூடிய ஒரு சவாலும் ஒரு பெரும் லட்சியமுமாகும் இது.

நன்றி : இண்டியன் எக்ஸ்பிரஸ்

ஸ்ரீராமபிரானின் அருளுரைகள்

1. ஆத்மா எங்கும் நிறைந்தது, அகண்டமானது, சச்சிதானந்தமயமானது, நித்திய மானது. புத்தியின் லட்சணங்கள் ஆத்மாவிடம் இல்லை.

2. ஆத்மா மாறுதல் அடைவதில்லை. ஷட்பாவ விகாரங்கள் (பிறப்பு, இருப்பு, மாற்றம், வளர்ச்சி, தேய்வு, அழிவு என்று சொல்லப்படும் ஆறு வகையான மாறுதல்கள்) அதற்கு இல்லை. ஆத்மாவினுடைய சுயப்பிரகாசத்தினாலேயே பிரபஞ்சம் முழுவதும் பிரகாசத்துடன் விளங்குகிறது. ஆத்மா ஏகமானது, இரண்டற்றது. அது சத்திய சொரூபமானது, ஞானசொரூபமானது. அது பற்று அற்றது. அது கண்ணுக்குப் புலனாகாதது. அந்தர்ஞானத்தால் (உள்ளுணர்ச்சியால், Intuition) இந்த ஆத்மாவை அறியலாம்.

3. ஜீவாத்ம — பரமாத்ம ஐக்கியத்தை உண்மை என்று முதலில் அறிய வேண்டும். குருவின் உபதேசத்தாலோ சாஸ்திரபடனத்தாலோ இதை அறியலாம். ஜீவபிரம்ம ஐக்கியத்தைச் சாட்சாத்கரித்த மறுகணமே அவித்தையின் மூலமானது அதனுடைய காரண காரியத்தோடு பரமாத்மாவுடன் கலந்துவிடும். இந்த நிலை மோட்சம் எனப்படும்.

4. சம்சாரம் என்ற மரத்திற்கு இந்த உடல்தான் வேர் போன்று இருந்துகொண்டிருக் கிறது. இந்த உடலின் மூலம் ஆத்மாவானது பிள்ளைகளுடனும் மற்றுமுள்ள உறவினர்களுடனும் தொடர்பு கொள்கிறது. உடல் இல்லாவிட்டால் ஆத்மாவுக்கு உறவினர் என்று இருப்பார்களா என்ன? ஆத்மாவோ பிள்ளைகளுடனும் உறவினர்களுடனும் அஸங்கமானது (தொடர்பு அற்றது).



ஸ்ரீ ராமகிருஷ்ணரின் அருள் வாக்கு

வெள்ளிக்கிழமை, டிசம்பர் 14, 1883

ஒரு பக்தர் : பணத்திற்காக வேண்டி எல்லோருமே முயற்சி செய்வதை நாம் பார்க்கிறோம். கேசவசந்திர சேன்கூடத் தமது மகளை ஓர் இளவரசனுக்குத் திருமணம் செய்து கொடுத்தார்.

ஸ்ரீராமகிருஷ்ணர் : கேசவரின் விஷயமே முற்றிலும் வேறானது. ஓர் உண்மையான பக்தன் தானாக எந்தவித முயற்சியும் செய்யாமற் போனாலும் பகவானே அவனுக்குத் தேவையான எல்லா வசதிகளையும் செய்து வைக்கிறார். ஓர் இளவரசனின் செலவுக்குத் தேவையான பணம் அவன் கேட்காவிட்டாலும் எப்படியும் தானாகத் தரப்படுவதைப் போன்று அந்தப் பக்தனின் நிலை இருக்கிறது.

பணம் சேர்ப்பதற்காகவே ஓயாமல் பாடுபட்டுக்கொண்டிருக்கும் வக்கீல் போன்றவர்களைப் பற்றி நான் இங்கே பேசவில்லை. அவர்கள் பணம் சம்பாதிப்பதற்காக மற்றவர்களைத் திருப்திப்படுத்த வேலைசெய்து வேலை செய்து, நாளடைவில் மற்றவர்களுக்கு அடிமைகளாகவும் ஆகிவிடுகிறார்கள். உண்மையான இளவரசனைப் போல இருக்கும் உத்தம பக்தனைப் பற்றித்தான் நான் இப்போது பேசுகிறேன். உண்மையான பக்தனுக்கு எந்தவித ஆசையும் இல்லை. அவன் பணத்தைப் பொருட்படுத்துவதுமில்லை, சேர்க்க விரும்புவதுமில்லை. பணம் தானாக அவனுக்கு வந்து சேருகிறது. பகவத்கீதையில் அத்தகைய பக்தனைப்பற்றி 'யத்ருச்சாலாபஸந்துஷ்ட:—தானாகக் கிடைப்பதைக் கொண்டு திருப்தியடைபவன்' என்று சொல்லியிருக்கிறது.

சுயநல ஆசைகளிலிருந்து விடுபட்டிருக்கும் ஓர் உத்தமமான பிராம்மணன், தீண்டப்படாதவர்களின் வீட்டிலிருந்துகூட உணவு ஏற்றுக் கொள்ளலாம். யத்ருச்சா லாப ஸந்துஷ்டி அதாவது தற்செயலாகக் கிடைப்பதில் திருப்தி அடைவது என்பது அவனது வழியாகும். அத்தகையவன் தெய்வச் செயலாகத் தனக்கு வருவதை ஏற்றுக்கொள்கிறான். அவனாகத் தனக்கு இன்னது வேண்டும் என்று விரும்பி எதையும் சங்கல்பிப்பதில்லை. ஆனால் அவனுக்குத் தேவையானது தானாகவே அவனை வந்தடைகிறது.

ஒரு பக்தர் : சுவாமி, உலகில் ஒரு மனிதன் எப்படி வாழ வேண்டும்?

ஸ்ரீராமகிருஷ்ணர் : சேற்றுமீன் சேற்றில் வாழ்வதைப் போல நீ இந்த உலகில் வாழ்ந்து வர வேண்டும். சாதகன் ஒருவன் அடிக்கடி உலக வாழ்க்கையிலிருந்து தன்னை விடுவித்துக் கொண்டு ஏகாந்தமான இடத்திற்குச் சென்று பகவானைக் குறித்துத் தியானத்தில் திரும்பத் திரும்ப ஈடுபட வேண்டும். அவ்விதம் செய்வானானால் அவனுக்குக் கடவுளிடம் பக்தி தானாகவே உண்டாகும். அதற்குப் பிறகு அவன் உலகில் வாழ்ந்தாலும் பற்றின்றி இருக்கலாம். சேறு இருக்கிறது; அந்தச் சேற்றில்தான் சேற்றுமீன் வாழ்கிறது. ஆனால் அந்த மீனின் உடலில் சிறிதேனும் சேறு படிவதில்லை. அது போலவே குடும்ப வாழ்க்கையில் இருப்பவனும் பற்றற்றவனாக வாழ்ந்து வர வேண்டும்.

இவ்விதம் தாம் சொல்லிக்கொண்டிருப்பதை ம-கூர்ந்து கவனித்துக் கேட்டுக்கொண்டிருப்பதை, குருதேவர் கவனித்தார்.

ஸ்ரீராமகிருஷ்ணர் (ம — வைப் பார்த்து): உலகப் பொருள்களிடம் ஒருவனுக்குத் தீவிரமான வைராக்கியம் ஏற்படுமானால், அத்தகையவன் ஈசுவர சாட்சாத்காரத்தைப் பெறுகிறான். தீவிர வைராக்கியம் படைத்தவனுக்கு உலக வாழ்க்கை ஒரு காடு தீப்பற்றி எரிவதைப் போன்று தென்படுகிறது. அத்தகையவனுக்குத் தன் மனைவியும் மக்களும் உறவினர்களும் ஓர் ஆழமான பாழுங்கிணறு போன்று தென்படுகிறார்கள். அப்படிப்பட்ட தீவிர வைராக்கியம் ஒருவனுக்கு ஏற்படும்போது அவன் வீட்டையும் குடும்பத்தையும் துறந்து சென்றுவிடுகிறான். பற்றற்ற மனப்பான்மையுடன் குடும்ப வாழ்க்கையில் இருப்பது என்பதெல்லாம் அவனுக்குப் போதாது; அவன் விஷயத்தில் அது பொருந்தவும் பொருந்தாது.

காமினி காஞ்சனமே மாயையாகும். மாயை எத்தகையது என்பதை உள்ளது உள்ளபடி நீ ஒரு தடவை அறிந்து கொண்டால் அது வெட்கப்பட்டுக்கொண்டு உன்னிடமிருந்து ஓடோடிவிடும். ஒருவன் புலித்தோலைப் போர்த்திக்கொண்டு மற்றொருவனைப் பயமுறுத்துவதற்கு வந்தான். ஆனால் பயமுறுத்தப் பெற்றவனோ, "டேய்! நீ யார் என்று எனக்குத் தெரியும். நீ நம்முடைய ஹரிதானே?" என்று புலிவேஷக்காரனிடம் கேட்டதும் புலிவேஷம் போட்டிருந்தவன் புன்சிரிப்புச் சிரித்துக் கொண்டே வேறு ஒருவனைப் பயமுறுத்துவதற்குச் சென்றுவிட்டான்.

பெண்கள் அனைவரும் ஜகன்மாதாவான அம்பிகையின் சொரூபமாவர். அந்த ஆதிபராசக்தியே பெண்களாக விளங்கிக்கொண்டிருக்கிறாள். அந்த ஆதிசக்தியே பெண்வடிவம் தாங்கியிருக்கிறாள். ராமாயணத்தில் பின்வருமாறு, நாரதமகரிஷியும் மற்றவர்களும் ஸ்ரீராமபிரானைப் பார்த்துப் போற்றித் துதித்ததாகச் சொல்லப்பட்டிருக்கிறது:— "ஓ ராமா! உலகிலுள்ள எல்லா ஆண்களாகவும் நீயே இருக்கிறாய். அதுபோலவே உலகிலுள்ள எல்லாப் பெண்களாகவும் சீதையே இருக்கிறாள்.

நாட்டறம்பள்ளியில் பல் சிகிச்சை முகாம்— புத்தாடை வழங்கும் விழா

நாட்டறம்பள்ளி, ஸ்ரீராமகிருஷ்ண மடத்தின் மருத்துவமனையில் 15-7-81 புதன்கிழமையன்று டாக்டர் பி. கே. பாஸ்கர், எம். டி. எஸ். தலைமையில் ஆறு டாக்டர்கள் பள்ளி மாணவ மாணவிகளையும் பொதுமக்களையும் பரிசோதித்துச் சிகிச்சை அளித்தார்கள். 800 மாணவ மாணவிகளும் பொதுமக்களும் பல் சிகிச்சை முகாமில் கலந்துகொண்டு பயன் பெற்றனர்.

15-7-81 மாலை ஐந்து மணியளவில் வட ஆர்க்காடு மாவட்ட ஆட்சித்தலைவர் திரு என். நாராயணன் தலைமையில் புத்தாடை வழங்கும் விழா வெகு சிறப்பாக நடைபெற்றது. சுவாமி சர்வக்ஞானந்தர் விழாவிற்கு வந்திருந்த அனைவரையும் வரவேற்றுப் பேசினார். தமிழ் நாடு அரசு நில நிர்வாக ஆணையாளர் திரு ராம்சந்தர் உரைநிகழ்த்தி மாணவ மாணவிகளுக்கு நோட்டுப்புத்தகங்களை வழங்கினார். சென்னை விவேக் கம்பெனி உரிமையாளர் திரு பி. ஏ. கோதண்டராமன் சிறப்புரை ஆற்றினார். அவரது தந்தை திரு அசுவத்த நாராயணன் 250 மாணவ மாணவியருக்குப் புத்தாடைகளை வழங்கி மடத்து மருத்துவமனை வளர்ச்சிக்கு ரூ. 1001 நன்கொடை வழங்கினார். டாக்டர் பி.கே. பாஸ்கர், ராமகிருஷ்ண மடம் 16 ஆண்டுகளாக நாட்டறம்பள்ளி மற்றும் சுற்று வட்டார மக்களுக்கு ஆற்றிவரும் மருத்துவச் சேவையை எடுத்து உரைத்தார்.

விரைவில் சென்னை ராமகிருஷ்ண மடத்தின் உதவியுடன் நாட்டறம்பள்ளி மடத்திற்கு நடமாடும் மருத்துவ வேன் வர இருக்கிறது. இதன் மூலம் சுற்று வட்டார மக்களுக்கு மேலும் நல்ல விதமாக மருத்துவச் சேவை கிடைக்க இருக்கிறது.

விழாவின் இறுதியில் குழந்தைகளின் கலை நிகழ்ச்சி நடைபெற்றது.

ராமா! நீயே இந்திரன் ஆவாய்; சீதா பிராட்டியே இந்திராணி ஆவாள். நீயே சிவபெருமான்; சீதாபிராட்டியே பார்வதி தேவி. நீயே ஆண்கள் வடிவத்தில் திகழ்கிறாய்; சீதாபிராட்டியே பெண்கள் வடிவத்தில் திகழ்கிறாள். இதற்கு மேலும் சொல்லுவதற்கு என்ன இருக்கிறது? எங்கெல்லாம் ஆண்தத்துவம் உள்ளதோ அங்கெல்லாம் நீயே விளங்குகிறாய். அது போலவே எங்கெல்லாம் பெண்தத்துவம் உள்ளதோ அங்கெல்லாம் சீதையே விளங்குகிறாள்.''

(பக்தர்களிடம்) விரும்பிய மாத்திரத்திலேயே ஒருவன் எல்லாவற்றையும் துறந்துவிட முடியாது. பிராரப்த கர்மம், சம்ஸ்காரம் போன்றவையும் இருக்கின்றன. ஒரு சமயம் யோகி ஒருவர், ''நீ என்னுடன் கானகத்தில் வாழ்ந்து பகவானைத் தியானிப்பதில் ஈடுபடுவாயாக'' என்று ஓர் அரசனிடம் கூறினார். அதற்கு அந்த அரசன், ''தங்கள் ஆணையை என்னால் சரிவர நிறைவேற்ற முடியாது. உங்களோடு என்னால் சேர்ந்து வாழ முடியும். ஆனால் போகத்தில் எனக்கு இன்னும் ஆசை இருக்கிறது. நான் இந்த அரணியத்தில் வாழ ஆரம்பித்தால் ஒருவேளை நான் இந்த இடத்திலும் ஒரு ராஜ்யத்தை ஏற்படுத்திவிடுவேன். என்னிடம் இன்னும் பந்தபாசங்களும் ஆசைகளும் இருக்கின்றன'' என்று பதில் கூறினான்.

நட்வர் பாஞ்சா சிறிய பையனாக இருந்த போது இங்குள்ள தோட்டத்தில் தன் பசுக்களை மேய்த்து வந்தான். ஆனால் அவனிடம் பல ஆசைகள் இருந்தன. ஆதலால் அவன் விளக்கெண்ணெய்க் கிடங்கு ஆரம்பித்தான். இப்போது அந்த வியாபாரத்தின்மூலம் நிறையப் பணமும் சேர்த்துவிட்டான். ஆலம் பஜாரில் அவனுடைய எண்ணெய் வியாபாரம் இப்போது மிகமிக நன்றாக நடந்து வருகிறது.

சக்தியை உபாசிக்கும் ஒரு சம்பிரதாயத்தில் பெண்களுக்கிடையிலிருந்து ஆத்மசாதனை செய்யும் வழக்கம் இருக்கிறது. கர்த்தாபஜா என்ற சம்பிரதாயத்தைச் சேர்ந்த பெண்கள் இருந்த இடத்திற்கு என்னை ஒரு சமயம் சில பக்தர்கள் அழைத்துச் சென்றார்கள். அங்கிருந்த எல்லாப் பெண்களும் என்னைச் சூழ்ந்து உட்கார்ந்துகொண்டனர். நான் அவர்களை, ''அம்மா, அம்மா!'' என்று அழைத்தேன். நான் அவ்விதம் அழைத்ததும் அவர்கள் தங்களுக்குள் குசுகுசுவென்று இரகசியமாகப் பேசிக்கொண்டனர் :— ''இவர் இன்னும் ஒரு பிரவர்த்தக ராகத்தான் (ஆரம்ப நிலையிலுள்ள ஒரு சாதக ராகத்தான்) இருக்கிறார் போலிருக்கிறது. ஆதலால்தான் எது சரியான வழி என்று இவர் இன்னும் தெரிந்துகொள்ளவில்லை'' என்று அந்த மாதர் ஒருவருக்கு ஒருவர் பேசிக்கொண்டார்கள். அவர்களின் கருத்துப்படி பிரவர்த்தகன் என்றால் இன்னமும் பழுக்காமல் ஆத்மசாதனத்தின் ஆரம்பநிலையில் இருப்பவன் என்று பொருளாகும். அந்த ஆரம்பநிலையிலிருந்து ஒரு படி முன்னேறியவனைச் சாதகன் என்று அவர்கள் சொல்கிறார்கள். சாதனத்தில் முதிர்ச்சி பெற்று மிகவும் உயர்ந்த நிலையை அடைந்திருப்பவனை அதிசித்தன் (சித்தனான சித்தன்) என்று அவர்கள் அழைக்கிறார்கள்.

அங்கே குழுமியிருந்த பெண்களில் ஒருத்தி வைஷ்ணவசரணனின் அருகில் சென்று அமர்ந்தாள். பிறகு அதைப்பற்றி வைஷ்ணவ சரணனிடம் வினவியபோது, அவர், ''இந்த மாது தன்னை ஒரு சிறுமி என்று கருதி வருகிறாள்'' என்று பதில் சொன்னார்.

பெண்களை மனைவியாகக் கருதுபவன் ஆன்மிக வாழ்க்கையிலிருந்து வழுவி விரைவில் வீழ்ச்சியடைகிறான். ஆனால் மாது ஒருத்தியைத் தாய் என்று கருதுவது தூய மனநிலையாகும்.

* * * *

காம்லாரிபாடா என்ற இடத்திலிருந்து வந்திருந்த பக்தர்கள் பரமஹம்சரிடமிருந்து விடைபெற்றுச் செல்ல எழுந்தனர். ''சரி, நாங்கள் போய்வருகிறோம். காளிதேவியையும் மற்றும் இங்குள்ள தெய்வ மூர்த்தங்களையும் தரிசித்துவிட்டுச் செல்கிறோம்'' என்று அவர்கள் பரமஹம்சரிடம் சொல்லி விடைபெற்றுச் சென்றனர்.

காளிகோவிலைச் சேர்ந்த பஞ்சவடியிலும் மற்றும் சில இடங்களிலும் ம- தனிமையில் உலாவிக்கொண்டிருந்தார். தனிமையில் உலாவியபடியே அவர் பகவான் ஸ்ரீராமகிருஷ்ணர் அருளிய பின்வரும் கருத்துக்களைத் தமக்குள் சிந்தித்துக்கொண்டிருந்தார்.

''ஆண்டவனைச் சாட்சாத்கரிக்க முடியும். தீவிர வைராக்கியம் அதாவது அகத்துறவு இல்லறத்தில் வாழும் ஒருவனிடம் அவசியம் இருக்க வேண்டும். மாயை எத்தகையது என்பதை உள்ளது உள்ளபடி நீ ஒரு தடவை அறிந்துகொண்டால் அது தானாகவே உன்னிடமிருந்து விலகி ஓடிவிடும்'' என்று பரமஹம்சர் ம-விடம் கூறியிருந்தார். ⁂

இயற்கை மனிதனுக்கு இரண்டு காதுகளும் இரண்டு கண்களும் கொடுத்திருக்கிறது. ஆனால் நாக்கு மட்டும் ஒன்றுதான். பேசுவதைக்காட்டிலும் பார்ப்பதும் கேட்பதும்தான் அதிகம் இருக்க வேண்டும் என்பதே இதன் நோக்கம். —சாக்ரட்டீஸ்

விழைந்ததை வழங்கும் விநாயகப்பெருமான்

எம். கே. வேங்கடராமன்

உயிர்கள் அனைத்தும் மிக எளிதில் வழிபட்டு அருட்பயன் பெற்று உய்யும் வண்ணம் எங்கும் மேவி அமர்ந்திருப்பவர் விநாயகர்.

ஆற்றிலோ குளத்திலோ அதிகாலையில் நீராடுவோர் வழிப்பாட்டுக்காக எங்கும் சென்று அலையாவண்ணம், 'எங்கே மெய்யன்பர் உளர் அங்கே நலம்தர எழுந்தருளும்' கருணைக் கடலாக, அந்த நீர்நிலைகளின் கரையிலேயே அமர்ந்தருளி, அன்புடன் வழிபடும் பக்தகோடிகளுக்கு அருள்நலம் சுரப்பவர் விநாயகர்.

குழந்தைகள் முதல் கிழவர்கள் வரை, கல்லார் முதல் கற்றறிந்த புலவர் வரை, பரம ஏழை முதல் பெருஞ் செல்வர் வரை யாவரும் மிக எளிதில் வழிபட்டுப் பயன் பெறத்தக்க அருள்மூர்த்தி ஆனைமுகப் பெருமான்.

எளிதில் வழிபட எங்கும் திகழ்பவர்

வீதிதோறும் கோயில்கொண்டு வீற்றிருந்து அருளுகிறவர் விநாயகப் பெருமான். வெளி நாடுகளிலும் விநாயகர் வழிபாடு சிறப்புற்று விளங்குகிறது. வழிபாட்டுக்கு உரிய மூர்த்திகள் பலப்பல இருந்தாலும், பெரும்பாலான மக்கள் விநாயகரை வழிபட்டுப் பயன் அடைகின்றனர். பக்தர் பலரது இல்லங்களில் நாள்தோறும் விநாயகரைப் பூசிக்கும் நற்பழக்கம் இருந்து வருகிறது.

எத் தொழில் செய்யினும், எச்சடங்கைத் தொடங்கினும், எந் நூல் தொடங்கினும், எக் கோயிலுக்கு ஏகினும் முதற்கண் விநாயகரை வழிபடுவது வழக்கமாக உள்ளது.

விக்கினேசுவரர்

அருள்நலம் பெற நாடுவோரும், நல்வாழ் வாற்ற விழைவோரும், செய்வன திருந்தச் செய்து முழுப் பயன் பெற விரும்புவோரும் எல்லா நேரத்திலும் இறையுணர்வோடு இருக்க வேண்டியது அவசியம். இறையுணர்வை மறந்து, செயலை மட்டும் நாடித் தொடங்கு வோருக்கு நல்லறிவூட்ட விக்கினத்தை உண்டாக்குவதும், உண்மையை உணர்ந்து, நல்லறிவுற்று, இறைவனை நாடி வழிபாடு செய்தபின், திருவுள்ளமிரங்கி, அந்த விக்கினத்தை நீக்குவதும் இவரது அருள் விளையாட்டு.

ஆதலால், இவர் 'விக்கினேசுவரர்' என்னும் திருநாமம் பெற்று விளங்குகிறார்.

மூன்று கண்கள்

உலகத்தை விளக்கிக் காட்டச் சூரியன், சந்திரன் ஆகிய இரண்டு சுடர்கள் தேவைப் படுகின்றன. ஒவ்வோர் உயிரினிடத்தும் அவ்விரு சுடர்கள் இரு கண்ணொளியாய் அமைந்தால் தான் உலகத்தையும், அதிலுள்ள அனைத்தையும் புரிந்துகொள்ள இயலும், இதற்கு மேல் மெய்ப்பொருளை உணர்வதற்கு ஞானக் கண் தேவை. இந்த மூன்றுமே விநாயகரின் முக்கண்களாய்த் திகழ்ந்து, எல்லா உயிருக்கும் ஒளியூட்டி உதவுகின்றன.

ஐந்து கரங்கள்

உயிர்வகைகள் பிறவிக் கடலினின்றும் பேரின்பக் கரை சேர உதவியாக ஐம்பொறி புலன்கள் இறையருளால் வழங்கப் பெற்றுள்ளன. அவற்றை அருள்துணை கொண்டு சரியானபடி இயக்காததனால், அவை உயிர்களை மேல்வழி செல்லவொட்டாதபடி தடுத்துக் கீழ்வழிக்கே இழுக்கின்றன. அவற்றை அடக்கியாண்டு, அருள்வழியில் திரும்பி, உயிர்களைப் பேரின்பக்கரை சேர்ப்பிக்க உதவுமாறு ஊக்கியருள, விநாயகப் பெருமானின் ஐந்து கரங்களும் பேருதவி புரிகின்றன. ஆக்கல், அளித்தல், அழித்தல், மறைத்தல், அருளல் என்னும்

உழைப்பு என்பது தெய்வ வழி பாட்டுக்குச் சமம். சிரிப்பே வாழ்க்கையின் ஜீவன்.

—வல்லபபாய் படேல்

மக்களுடைய காரியங்களைக் கவனிக்க நான் எல்லா இடங்களிலும் தயாராக இருக்கிறேன்.

—அசோக சக்கரவர்த்தி

நியாயமான தேவைகளைப் பெற வரும் பொதுமக்களிடம் வற்புறுத்திக் கைக்கூலி வாங்கும் அரசு ஊழியர்களை அந்த நாட்டு அதிபன் கடுமையாகத் தண்டிக்க வேண்டும். அந்த வஞ்சகப் பித்தர்களின் சொத்து சுதந் திரங்களையெல்லாம் பறிமுதல் செய்து நாட்டை விட்டே விரட்டிவிட வேண்டும்.

—மனுஸ்மிருதி

ஐந்தொழிலையும் விநாயகரின் ஐந்து கரங்களும் இயற்றுகின்றன என்று ஆன்றோர் கூறுவர்.

பெருவயிறும் திருவடியும்

பல்லாயிரம் கோடி அண்டங்களும் அவருள் அடங்கியுள்ளன என்பதை அவருடைய பெரு வயிறும், அபரஞானத்தை அவருடைய இடது திருவடியும், பரஞானத்தை அவருடைய வலது திருவடியும் உணர்த்துகின்றன.

கருணாமூர்த்தியாகிய அவருடைய அருட் பெருந் தத்துவங்களை, நாக் கொண்டு உரைக் கவோ, எழுத்தால் எழுதவோ இயலாது. திருவருள் துணைக் கொண்டு, அனுபவத்தால் உணர்ந்து இன்புறுவதே சாலச் சிறந்ததாம்.

விநாயகர்

வழிபடுவதற்கு உள்ள மூர்த்திகள் பல; அந்த அந்த மூர்த்திகளுக்கு உரிய மந்திரங்கள் பல. எல்லா மந்திரங்களும் பிரணவ மந்திரமாகிய ஓங்காரத்துள் அடக்கம்.

எல்லா மூர்த்திகளும் பிரணவ சொரூபமாகிய விநாயக மூர்த்திக்குள் அடக்கம்.

'விநாயகர்' என்றாலே, தமக்கு மேல் மற்றொரு நாயகர் இல்லாதவர் என்று பொருள். ஆகவே உயர்வற உயர்நலம் உடையவர் விநாயகப்பெருமான்.

விநாயக மூர்த்திக்குள் எல்லா மூர்த்திகளும் எல்லாச் சக்திகளும் விளங்குவதனால், விநா யகரை வழிபடும் அன்பர்கள் உலகில் பலரால் போற்றப்பெறும் எந்த மூர்த்தியையோ, எந்தச் சமயநெறியையோ இழிவாக எண்ணு வதும் இயம்புவதும் கூடாது.

'அணுவுக்கு அணுவாய், அப்பாலுக்கு அப்பா லாய்' விளங்குபவர் விநாயகப் பெருமான். ஆதலால், எல்லாப் பொருளுள்ளும், எல்லா உயிருள்ளும் அவருடைய அருட்பொலிவைக் கண்டு போற்றி, ஆனந்தம் எய்த வேண்டியது அன்பர்களின் கடமையாகும்.

ஆனைமுகக் கடவுள்

ஆனை எப்போதும் 'ஓம்' என்ற ஒலியை முழங்கிக்கொண்டிருக்கும். ஆதலால் எல்லா மூர்த்திகளுக்கும் ஆதிமூர்த்தியாகவும், எல்லா மூர்த்திகளின் ஆற்றலையும் ஒருங்குடையவராக வும், மூலமறையாகிய ஓங்காரத்திற்கு உரியவ ராகவும் விளங்கும் விநாயகக் கடவுள் ஆனை முகத்துடன் காட்சியளிக்கிறார்.

விநாயகப் பெருமானின் வலது திருச்செவி யில் தொடங்கி, திருமுடியைத் தொட்ட வண்ணம் இடது திருச்செவியைச் சுற்றிக் கொண்டு, அப்படியே தொடர்ந்து வந்து, இடது பக்கத் தந்தத்தைத் தொட்டவண்ணம், துதிக்கையை ஒட்டி வந்து வளைந்தால் ஓங்காரம் அமைவதைக் காணலாம்.

ஓங்காரத்தின் உருவாயும் பொருளாயும் பயனும் விளங்குபவர் விநாயகப்பெருமான்.

புராணக் கதைகள்

வாழ்விற்கு நலம் விளக்கத்தக்க அருமறைக் கருத்துக்களை உலக மக்கள் எளிதில் உணர்ந்து கொள்ளும் வகையில் கதை வடிவில் அருட் பெரியோர்களால் ஆக்கித்தரப் பெற்றவையே புராணங்கள் ஆகும்.

விநாயகரின் பெருமையை விரிவாக விளக்கும் நூல் 'விநாயக புராணம்' என விளங்குகிறது. ஏனைய பல புராணங்களிலும் பலப்பல இடங்



களில் விநாயகரின் சிறப்பு விளக்கப்பெற் றுள்ளது. அனைத்தையும் உணர்ந்து போற்ற வேண்டியது ஆருயிர்த் திரளின் கடமை. அவற்றுள் இரண்டொன்றை இப்போது உன்னுவோம்.

சூட்சுமத்தை விளக்குபவர்

ஒரு சமயம் நாரத மாமுனிவர் கனியொன் றைக் கையில் தாங்கிக் கயிலைக்கு ஏகினார். சிவபெருமானைப் பணிந்து, தாம் கொண்டு வந்த நறுங்கனியைக் கொடுத்தார்.

அப்போது அருகிலிருந்த விநாயகர், ‘கனி எனக்கு’ என்றார். முருகப்பெருமான், ‘எனக்கு’ என்றார். இது கண்ட சிவபெருமான், ‘உல கனைத்தையும் முதலில் சுற்றி வருபவருக்கே இந்தக் கனி உரியது’ என்றார்.

உலகனைத்தையும் ஒரு நொடியில் சுற்றி வந்து விடுவதாகக் கூறி முருகப்பெருமான் தம் மயில் வாகனத்தில் புறப்பட்டார்.

எல்லா உலகமும் பார்வதியுடன் விளங்கும் பரமனுள் அடக்கம்; ஆதலால் அம்மையப்ப ரைச் சுற்றி வந்து அருங்கனியைப் பெற்றுக் கொண்டார் ஐங்கரப் பெருமான். நொடிப் பொழுதில் உலகனைத்தையும் சுற்றி வந்த முருகப்பெருமான் கணேசரின் திருக்கரத்தில் கனியைக் கண்டு, வியந்து, முனிந்தார். காரணத்தை விளக்கினார் கண்ணுதற்கடவுள்.

இந்த வரலாறு உணர்த்துவது யாதெனில், உயிர்களாகிய நாம் உலகப் பொருள்களையும் உலக இன்பத்தையும் நாடி உழல்கிறோம், துன்புறுகிறோம்; பயன்பெற இயலாதுள்ளோம். ஆனால் ஞானவான்கள் உலகனைத்துக்கும் காரணமாக விளங்கும் மெய்ப்பொருளாகிய இறைவனையே நாடி, அவனருளில் தோய்ந்து, இமைப்பொழுதும் நீங்காது ஒன்றி, இறை யின்பப் பெரும் பயனை எய்துகின்றனர். வாழ்வில் பெற வேண்டிய வெற்றி இதுவே யாகும். இந்தப் பேருண்மையை உணர்த்தவே எல்லாம் வல்ல பரம்பொருள் சிவன், உமை, கணேசர், முருகன் என்ற நான்கு திருவுருவம் தாங்கி, இந்த அருள் நாடகத்தை இயற்றி யருளினார்.

விரைவில் கயிலை சேர்த்தருளிய விந்தை

சுந்தரமூர்த்தி சுவாமிகள் சிவபெருமானின் அழைப்பிற்கிணங்கி, திருவஞ்சைக்களத்தி லிருந்து கயிலைக்குச் செல்வதை அறிந்த சேர மான் பெருமாள் நாயனார் தம் பஞ்சகல்யாணிக் குதிரையின் காதில் திருஐந்தெழுத்தை ஓதி அதன்மீதேறி, சுந்தரமூர்த்தி சுவாமிகளின் வெள்ளையானையை வலம் வந்து, முன்னே சென்றார்.

இதனை ஞானத்தால் உணர்ந்த ஔவைப் பிராட்டியார், தாமும் கயிலை செல்ல வேண்டும் என்ற எண்ணத்தால், அப்பொழுது தாம் இயற்றிக்கொண்டிருந்த விநாயகர் வழி பாட்டை விரைவாகச் செய்யலானார்.

அது கண்ட விநாயகக் கடவுள் ஔவையை நோக்கி, “நீ அவசரமின்றி, முறையுடன் வழி பாடாற்றுக. அவர்களுக்கு முன் உன்னை நாம் கயிலையில் சேர்ப்போம்” என அருளினார்.

அது கேட்ட ஔவையார் அவசரமின்றி, விநாயகர் அகவல் பாடிப் பூசையைச் செய்து முடித்தார். விநாயகப் பெருமான் தம் துதிக்கையால் ஔவையாரை அரை நொடிக் குள் கயிலையில் சேர்ப்பித்தார். ‘முன்னவனே முன்னின்றால் முடியாத பொருள் உளதோ?’

ஔவையார் கயிலையில் சிவபெருமான் திருக் கோயில் திருவாயிலின் அருகில் அமர்ந்து விநாயகப் பெருமானின் அருட்பெருங் கருணையை நினைந்து நினைந்து போற்றிய வண்ணம் இருக்கையில், சற்று நேரத்திற் கெல்லாம் சேரமான் வந்து, அங்கு அமர்ந் திருந்த ஔவைப்பாட்டியைக் கண்டு, “எமக்கு முன் எப்படி இங்குற்றீர்கள்?” என வினவ, ஐங்கரக் கடவுளின் அருள் நினைந்து போற்றி யவராய், “குதிரையும் காதம் கிழவியும் காதம் குலமன்னனே” என்று பாடியருளியதாக வரலாறு காண்கிறோம்.

இந்தக் கதையின் மூலம் நாம் உணரும் பேருண்மை யாதெனில், விநாயகப் பெரு மானை உண்மையன்போடு வழிபட்டால், மிக எளிய முறையில் திருவருள் பெறலாம், திருவடி சேரலாம் என்பதை உணர்ந்து போற்றி உய்ய வேண்டியவர்களாக உள்ளோம். ☆


உண்மையான மனிதன் யாரையும் துவேஷிப்பதில்லை. —நெப்போலியன்

ஏகாதசி விரதம்

ராஜம் ஐயராமன்

விரதம் என்பது அகத் தூய்மை, புறத் தூய்மை உண்டாவதற்காக ஏற்பட்டது மட்டுமல்ல. அந்த நாட்களின் கால விசேஷத்தினுலும் பெரும் பயன் உண்டு.

விரத நாட்களான புண்ணிய காலங்களில் உபவாசம் இருந்து இம்மை நலன்களையும், மறுமையில் உண்டாகும் நற்பிறவியையும் நல் வாழ்வையும் பெற முடியும் என்பது நமது ஆன்ருேர்களின் முடிவு.



விஷ்ணு விரதங்களில் மிகவும் மேன்மை யானதும், அனைவராலும் போற்றி அனுஷ் டிக்கப்படுவதுமான விரதம் ஏகாதசியாகும். மாதம் இரு முறை ஏகாதசி திதியில் அனுஷ் டிக்கப்படும் இந்த விரதம் தேய்பிறை வளர் பிறை ஏகாதசிகள் என இருவகை உண்டு. இவ்வித ஏகாதசிகளை எவ்விதம் அனுஷ்டிப்பது என்பதையும் அவற்ருல் பெறும் பலன்களையும் பத்ம புராணத்தில் உத்தர கண்டத்தில் சிவபெருமான் நாரதர், கௌதமர் முதலான மகரிஷிகளுக்கு எடுத்துக் கூறியுள்ளார்.

ஏகாதசியின் புராண வரலாறு

ஏகாதசி என்பது விஷ்ணுசக்தி. அவள் விஷ்ணுவின் திருமேனியில் தோன்றியவள். சந்திரவதி என்னும் நகரத்தில் தாலஜங்கன் என்ற அசுரனும் அவனது புத்திரனுன மரு என்பவனும் வாழ்ந்து வந்தார்கள். அவர்கள் தேவர்களை இம்சித்து வந்தனர். தேவர்களைக் காப்பதற்காக விஷ்ணு அவர்களுடன் ஆயிரம் ஆண்டுகள் போர் புரிந்தார்.

அப்போது அவர் மிகவும் களைத்துப்போய் ஓர் குகையில் படுத்து உறங்கினுர். அப்போது அவரது உடலிலிருந்து ஒரு கன்னிகை தோன்றி அந்த அரக்கர்களைக் கொன்ருள். அவளைக் கண்ட பரந்தாமன் மிக்க ஆனந்தம் கொண்டு, "பெண்ணே, உனக்கு ஏகாதசி என்று பெயர். இன்றுமுதல் உன்னை எவர் உபவாசம் இருந்து பூசிக்கிருர்களோ அவர் பிறவிக்கடலைத் தாண்டி நற்கதி அடைவர்" என்ருர்.

அன்று முதல் ஏகாதசி விரதத்தை முனிவர் களும் தேவர்களும் மானிடர்களும் நியமத் துடன் ஏற்று அனுஷ்டித்து வரலாயினர்.

ஏகாதசி விரத தத்துவ விளக்கம்

ஏகாதசி விரதம் என்பது, தன்னிலிருந்து தச இந்திரியங்களின் வழியாக வெளியிலும் உள்ளி லும் வியாபிக்கிற சக்தியைத் தன்னிலேயே ஒன்ருக்கி நிறுத்துவதாகும். அதாவது மெய் வாய் கண் மூக்கு செவி என்ற ஞானேந்திரியங் களையும், வாக்கு பாணி பாதம் பாயு உபஸ்தம் என்ற கர்மேந்திரியங்களையும் தொழிற்படுத்தும் மனச் சக்தியாகிய ஜீவசக்தியைத் தன்னில் ஒன்ருக்கி நிறுத்துவதே ஏகாதசி விரதம்.

உள்ளும் வெளியும் சதா சலித்துக்கொண் டிருக்கும் மனதை அதனுடைய உற்பத்தி ஸ்தானமாகிய பிரம்மரந்திரத்தில் அசையாமல் நிறுத்துவதாகும். பரமாத்மாவாக இருக்கிற மனசாகிய விஷ்ணுவிற்கு உள்ள நான்கு கைகள் பாணி என்பன. வாக்கு என்பது சப்தமாகும். இந்தக் கைகளில் பகவான் நான்கு ஆயுதங் களைத் தாங்கியிருக்கிருர்—சங்கு, சக்கரம், கதை, பத்மம் என்று.

சங்கின் உபயோகம் சப்தமாகும். இந்தச் சப்தத்தைக் கேட்பதற்கும் உண்டாக்கு வதற்கும் உள்ளது காது. இது மனம் என்ற விஷ்ணுவின் ஒரு கை.

சக்கரம் என்பது சுற்றிக்கொண்டிருப்பது. அது நம்முடைய கண் ஆகும். அது மனசாகும். மனம் சுற்றிக்கொண்டிருப்பதனுல் கண் பலவித மாகப் பார்க்க வழி உண்டாகிறது.

கதை என்பது நடனம் செய்துகொண் டிருக்கும் வாயுவாகும். அதன் போக்குவரத் துக்கு உபயோகமாக இருப்பது மூக்கு. இது பரமாத்மாவின் மற்ருெரு கை

மனமாக உள்ள வாயு வெளியில் வந்த பொழுது, தான் என்ற அகங்காரம் தோன்று கிறது. இதுவே தாமரை. அது வாயின் வழியாக வருவதாகும். இது பரமாத்மாவின் வேருெரு கை.

வாக்கு என்பது சப்தம். பாணி என்பது மேற் சொன்ன நான்கு கைகள். பாதம் என்பது மனதின் உற்பத்தி ஸ்தானம். பாயு என்பது ஊற்று உண்டாகிற இடம். உபஸ்தம் என்ருல் உபஸ்திதி செய்கிறது.

இதனுல் பஞ்ச இந்திரியங்களை ஞானேந்திரியம் என்கிருேம். மனம் சலனமின்றி உற்பத்தி ஸ்தானத்தில் லயிக்கிற நிலையாகும். இதனுல் தான் ஏகாதசி விரதம் அனுஷ்டித்தால் விஷ்ணு பதம் அடையலாம் என்று சொல்கிருேம். இதுவே மோட்சம் என்று சொல்லப்படுகிறது.

இனி ஓர் ஆண்டில் வரும் இருபத்தைந்து ஏகாதசிகள் பற்றியும் அவற்றின் பெயர்களையும், அவற்றை அனுஷ்டிப்பதனுல் ஏற்படும் பலன் களையும் பார்ப்போம்.

மார்கழி மாதம் வரும் ஏகாதசி விசேஷ மானது. கிருஷ்ணபக்ஷ (தேய்பிறை) ஏகா தசியை மோக்ஷ என்பர். சுக்லபக்ஷ ஏகா தசியை உத்பத்தி என்பர். இந்த இரண்டு நாட் களிலும் உபவாசமிருந்து கண்விழித்துப் பகவானைப் பூசிப்பவர்களுடைய பித்ருக்கள் நற்கதி அடைவர்.

தை மாதம் ஸபலை, புத்ரதா என்று இரண்டு ஏகாதசிகள் வரும். இதில் பகவா னுக்குப் பழங்களை அர்ப்பணம் செய்து தீப தானம் செய்ய வேண்டும். அவ்வாறு வழி பட்டால் இழந்த செல்வங்களைத் திரும்பப் பெறலாம். சுக்லபக்ஷ ஏகாதசியான புத்ர

இறைவனை நான் நேசிப்பதற்குக் காரணம், கடவுளே இல்லை என்று சொல்லும் அளவிற்கு அவர் சுதந்திரம் அளித்திருப்பதுதான்.

—ரவீந்திரநாத் தாகூர்

இல்லறமோ துறவறமோ ஜனசமுதாயத் திற்கும் ஜீவராசிகளுக்கும் சேவை செய் வதாக இருக்க வேண்டும். இந்தப் பொதுநல உணர்ச்சி இல்லாவிட்டால் எந்த அறமும் பயன்படாது.

—ரமண மகரிஷி

தாவை அனுஷ்டித்தால் புத்திர பாக்கியத்தைப் பெறலாம்.

மாசி மாதக் கிருஷ்ணபக்ஷ ஏகாதசிக்கு ஷட்திலா என்றும், சுக்கிலபக்ஷ ஏகாதசிக்கு ஜயா என்றும் பெயர். ஷட்திலா ஏகாதசியில் பசுவின் சாணத்தைப் பூமியில் விழாமல் கையிலேந்தி எள்ளையும் பருத்திக்கொட்டையை யும் அதில் கலந்து பிண்டமாகச் செய்து பூஜை செய்ய வேண்டும். அது பௌர்ணமி வரை உலராமல் இருந்தால் நமது பாவம் அகன்று புண்ணியம் உண்டானதென்று அறியலாம். தானம் எதுவுமே செய்யாதவன் இந்த ஏகாதசி யில் விரதமிருந்தால் அவனுக்குப் பூரண தான பலன் கிடைக்கும். ஜயா என்ற சுக்கிலபக்ஷ ஏகாதசியை விதிப்படி அனுஷ்டித்தால் பிரம்ம ஹத்தியும் பிசாசத்தன்மையும் அகலும்.

பங்குனி மாதக் கிருஷ்ணபக்ஷ ஏகாதசி விஜயா எனப்படும். இதனுல் சத்துருஜயம் அடையலாம். இதை ஸ்ரீராமபிரானுக்கு, பகதால்ப்யர் என்ற முனிவர் உபதேசித்தார். ராமர் இந்த விரதத்தை அனுஷ்டித்து ராவணனை வென்று சீதாதேவியை மீட்டார் என்பர். சுக்கிலபக்ஷ ஏகாதசி ஆமலகா; அன்றைக்கு நெல்லி மரத்தடியில் ஸ்ரீஹரி இருப்பதாகச் சொல்வர். அதனுல் அன்று நெல்லி மரத்தைப் பூஜித்து வருபவர்களுக்கு ஸ்ரீஹரியின் கிருபை உண்டாகி முக்தி கிடைக்கும்.

சித்திரையில் பாபமோசினி, காமதா என்ற இரண்டு ஏகாதசிகள். செய்த தவறுகளால் தம்மை அழித்துக் கொண்டவர்கள் இந்த ஏகாதசி விரதத்தால் தம்மைத் தூய்மைப் படுத்திக் கொள்ளலாம். காமதா என்னும் ஏகாதசி வேண்டியதை நல்கி ஒருவனைத் திருத்தி நல்வழிப்படுத்தும்.

வைகாசியில் வரூதினி, மோகினி என்ற இரண்டு புண்ணிய ஏகாதசிகளும், ஆனி மாதத்து அபரா, நிர்ஜலா என்ற ஏகாதசி களும் ஒருவனைக் கரையேற்றும் பெருமை வாய்ந்தவை.

ஒரு சமயம் பீமன் வியாச பகவானிடம், "ஒவ்வோர் ஏகாதசியிலும் என்னால் பட்டினி கிடக்க முடியவில்லை. ஆனால் ஏகாதசி புண்ணிய பலனை விடவும் மனமில்லை. என்ன செய்ய லாம்?" என்று கேட்டதற்கு அவர், "நிர்ஜலா என்ற ஏகாதசியன்று மாத்திரம் நீ உபவாசம் இரு. மற்ற ஏகாதசிகளின் புண்ணியத்தை நீ அடைவாய்" என்றார். பீமன் அனுஷ்டித்த நிர்ஜலா ஏகாதசி அதுமுதல் பாண்டவ ஏகாதசி எனப் பெயர்பெற்றது.

ஆடி மாதத்தில் யோகினி, சயினி என்ற இரண்டு ஏகாதசிகள். கிருஷ்ணபக்ஷ ஏகாதசி யான யோகினி, சிவ அபராதம் போன்ற பெரும் தவறுகள் இழைப்பவர்களுக்கும் நற்கதி கிடைக்கச் செய்யும். சுக்கிலபக்ஷ ஏகாதசியான சயினி மிகவும் விசேஷமான பலனைக் கொண் டது. இந்த ஏகாதசி முதல் பகவான் மகா பலியை அடக்கிப் பின்பு ஓய்வுகொள்ளப் பூமி யில் சயனம் செய்கிறார். ஆடி, ஆவணி, புரட்டாசி, ஐப்பசி என்ற நான்கு மாதங்களி லும் படுத்து உறங்கிக் கார்த்திகையில் விழிக் கிறார். இந்த நான்கு மாதங்களிலும் சாதுர் மாஸ்யம் என்ற விரதத்தைப் பெரியோர் பின் பற்றுவர். ஆடி ஆவணியில் காய்கறி வகைகளை நீக்கிப் புரட்டாசியில் தயிரையும், ஐப்பசியில் பாலையும், கார்த்திகையில் நெய், பருப்புகளையும் நீக்குவர்.

ஆவணி மாதத்துக் கிருஷ்ணபக்ஷ ஏகா தசிக்குக் காமிகை என்றும், சுக்கிலபக்ஷ ஏகா தசிக்குப் புத்ரதா என்றும் பெயர். காமிகை விருப்பங்களை நிறைவேற்றும். புத்ரதா புத்திர பாக்கியத்தை அளிக்கும்.

புரட்டாசி மாதத்தில் அஜா, பத்மநாபா என்ற பெயர்கொண்ட இரண்டு ஏகாதசிகள். இந்த ஏகாதசிகளில் இரண்டு ராஜரிஷிகள் நலன் பெற்றுள்ளனர். ஹரிச்சந்திர மகாராஜா அஜா ஏகாதசி விரதம் இருந்து தான் பட்ட துயரங்களைக் கடந்து சுகமடைந்தான். மாந்தாதா என்ற மன்னன் பத்மநாபா ஏகாதசி விரதமிருந்து தனது நாட்டில் மழையே இல்லாதபோது மழையை உண்டாக்கினான்.

ஐப்பசி மாதத்தில் இந்திரா, பாபாங்குசா என்ற ஏகாதசிகளும், கார்த்திகை மாதத்தில் ரமா, பிரபோதினி என்ற ஏகாதசிகளும் விசேஷ மானவை.

கார்த்திகை மாதத்தில் ரமா, பிரபோதினி என்ற ஏகாதசிகளில் பகவானின் வரலாறுகளைக் கேட்டும் துளசியினால் ஆராதனை செய்தும் பூசித்தால் மிகவும் நன்மை உண்டாகும்.

துளசிச்செடியை ஒன்பது விதமாகப் பூசிக்க வேண்டும். ஏகாதசி நாட்களில் துளசியைத் தரிசனம் செய்வது, தியானிப்பது, தொடுவது, துதிப்பது, துளசியை நடுவது, துளசிக்கு நீர் வார்ப்பது, விளக்கு வைப்பது, நமஸ்கரிப்பது, பூஜிப்பது இப்படி ஒன்பது வகையான துளசி ஆராதனை பகவானுக்கு மிகவும் பிரியமானவை.

இவ்வாறு இருபத்துநான்கு ஏகாதசிகளில் விரதம் இருந்து வருஷக் கடைசியில் இருபத் தைந்தாவது ஏகாதசி விரதத்தை அனுஷ்டிக்க வேண்டும். இது கமலா ஏகாதசி; இதனால் லக்ஷ்மியின் திருவருள் கிடைக்கும்.

மேற்கண்டவாறு இருபத்தைந்து ஏகாதசி களிலும் உபவாசம் இருந்தும், துளசிபூஜை செய்தும் பகவானைப் பக்தியோடு பூசிக்க வேண்டும். சூரிய உதயத்தில் எழுந்து குளித்துச் சந்தனம் பூசி, விஷ்ணுநாமங்களை ஜபித்து, விஷ்ணு கோயில்களுக்குச் சென்று தரிசனம் செய்து, அரிசியையும் உளுந்தையும் நீக்கி, இள நீரும் பழமும் உட்கொண்டு ஏகாதசி மாகாத் மியம் முதலிய கிரந்தங்களைப் பாராயணம் செய்து இரவு கண்விழித்து மறுநாள் துவாதசி புண்ணிய தினத்தில் பாரணம் செய்வது மிகுந்த புண்ணியச் செயலாகும்.

மார்கழி மாதம் ஏகாதசியில் துவங்கி ஓராண்டு தீபத்தை விதிப்படி பூசித்து, தானம் செய்வது தீப விரதம் எனப்படும். ஏகாதசி, துவாதசி, திரயோதசி ஆகிய மூன்றும் ஒரே நாளில் அமைந்தால் அந்த நாளை த்ரிஸ்ப்ருசா என்று மகா புண்ணிய தினமாகக் கருதுவர். இவ்வாறு வரும் நாளில் விரதமிருப்பது எல்லாப் பாவங்களையும் நீக்க வல்லது.

இவ்வாறு ஏகாதசி விரதத்தை அனுஷ்டித்து, பகவான் ஹரியின் திருவருளுக்குப் பாத்திர மாவோமாக. ※

நீ ஒருவரிடம் பொறுமை கொண்டு பேசாதே. கண்ணால் கண்டதற்கு மாறாகச் சொல்லாதே. கேட்போர்க்கு இன்பம் உண்டாகும்படி இனிமையாகப் பேசு. —ஔவையார்



பிள்ளையார் கொடுத்த பணம்

வைரம் ராஜகோபால்

ஓர் ஏழை தினமும் சிவன் கோவிலுக்குப் போவார். சுவாமி தரிசனம் செய்வார், "பகவானே! என் குறை உனக்குத் தெரியாதா? நீதான் காப்பாற்ற வேண்டும்" என்று பிரார்த்தித்துக்கொண்டு வந்துவிடுவார். ஒரு நாள் மாலையில் வழக்கம் போல் சுவாமி தரிசனம் செய்தார், பிரார்த்தனை செய்தார். அப்போது பரமசிவன் பிள்ளையாரைப் பார்த்து, "பிள்ளையாரே! இவன் தினமும் வந்து பிரார்த்திக்கிறானே. இவனைக் கொஞ்சம் கவனிக்கக்கூடாதா?" என்று கேட்டார்.

"என்ன செய்ய வேண்டுமோ சொல்லுங்கள், செய்கிறேன்" என்றார் பிள்ளையார்.

"சரி, நாளை மாலைக்குள் இவனுக்கு ஒரு பத்தாயிரம் ரூபாய் கிடைக்கும்படி செய்" என்றார் பரமசிவன்.

பிள்ளையார், "அப்படியே செய்கிறேன்" என்றார். இவர்கள் பேசியது அந்த ஏழைக்குத் தெரியாது. அவர் வழக்கம் போல் கும்பிட்டுவிட்டு வந்தார். ஆனால் அவருக்குப் பின்னால் இருந்த ஒருவர் இந்த உரையாடலைக் கேட்டுவிட்டார். அவர் ஒரு கமிஷன் ஏஜண்ட் போலிருக்கிறது. அவர் மூளை வேலை செய்தது : 'ஆகா! நாளை மாலைக்குள் இந்த ஏழைக்குப் பத்தாயிரம் ரூபாய் கிடைக்கப்போகிறது! பிள்ளையாரே சொல்லிவிட்டதனால் இது நிச்சயம் நடக்கும். இதில் நாம் ஒரு சின்ன வியாபாரம் செய்தால் என்ன?' என்று எண்ணிக்கொண்டார்.

உடனே அவர் வேகமாக நடந்து அந்த ஏழையை அணுகினார். மெதுவாகப் பேச்சுக் கொடுத்தார். அவரிடம் மிகுந்த அனுதாபத்துடன் பேசினார். அந்த ஏழை தமது சிரமங்களையெல்லாம் இவரிடம் சொன்னார். "சரி, உங்களைப் பார்த்தால் நல்ல மனிதராகத் தெரிகிறது. உங்களுக்கு ஏதாவது உதவி செய்ய வேண்டும் போல் தோன்றுகிறது. ஒன்று செய்கிறேன். உங்களுக்கு இப்போது நான் இனாமாக ஓர் ஆயிரம் ரூபாய் தருகிறேன். செலவுக்கு வைத்துக் கொள்ளுங்கள்" என்றார் கமிஷன் ஏஜண்ட்.

"ரொம்ப சந்தோஷம்" என்றார் ஏழை.

"சரி, ஒரே ஒரு நிபந்தனை" என்றார் ஏஜெண்ட்.

"என்ன?"

"அதாவது இப்போது நான் ஆயிரம் ரூபாய் கொடுத்துவிடுகிறேன். நாளை மாலைக்குள் உங்களுக்கு ஏதாவது பணம் திடீரென்று கிடைத்தால் அப்படியே என்னிடம் கொடுத்துவிட வேண்டும், அவ்வளவுதான். ஒன்றும் கிடைக்காவிட்டால் போகட்டும். ஆயிரம் ரூபாய் உங்களுக்குத்தான்" என்றார் ஏஜண்ட்.

ஏழை பார்த்தார்; கொஞ்சம் யோசித்தார். 'இவர் யார்? இவர் எதற்காக என்னிடம் வந்து இப்படி ஆயிரம் ரூபாய் தருகிறார்? இதில் ஏதோ விஷயம் இருக்குமோ?' என்று யோசித்தார். கொஞ்சம் பிகு பண்ணிப் பார்க்கலாமே என்று நினைத்தார். "அதெல்லாம் வேண்டாம். உங்கள் பணம் எனக்கு எதற்கு? ஏதோ பகவானைப் பார்த்துக் கொடுக்கட்டும்" என்று இழுத்தார்.

ஏஜண்ட் விடவில்லை. "சரி, இரண்டாயிரமாக வைத்துக்கொள்ளுங்கள். உங்களைப் பார்த்தால் ஏதோ உபகாரம் செய்ய வேண்டுமென்று தோன்றுகிறது. வைத்துக்கொள்ளுங்கள்" என்று சொல்லி, இரண்டாயிரம் ரூபாய் நோட்டை எண்ணினார்.

ஏழை மீண்டும் யோசித்தார். மறுபடியும் பிகு செய்தார். வேண்டாம் என்றார். ஏஜண்ட் விடவில்லை. இரண்டாயிரம் என்பதைக் கொஞ்சம் கொஞ்சமாக உயர்த்திக்கொண்டே போய் ஒன்பதாயிரத்தைந்நூறு வரை கொடுப்பதாகச் சொன்னார்.

ஏழை பார்த்தார். சரி, ஏதோ ஒன்பதாயிரத்தைந்நூறு ரூபாய் சும்மா கிடைக்கிறது. வாங்கிக்கொள்வோம். நாளை மாலைக்குள் நமக்கு என்ன அதிர்ஷ்டம் வந்து என்ன பணம் வந்துவிடப்போகிறது? அப்படி வந்தால் இவன் எடுத்துக் கொண்டு போகட்டுமே. இப்போது கையில் கிடைப்பதை விட வேண்டாம்' என்று எண்ணினார். "சரி, நீங்கள் சொல்கிற மாதிரியே செய்யுங்கள். இப்போது இந்த ரூபாயைக் கொடுங்கள். நாளை மாலைக்குள் எனக்கு ஏதாவது பணம் வந்தால் நீங்களே எடுத்துக்கொள்ளுங்கள்" என்றார்.

ஏஜண்ட் ரூபாயை எண்ணிக் கொடுத்துவிட்டு அவர் பின்னாடியே போய்க் கொண்டிருந்தார்.

எந்த நேரம் அவருக்குப் பணம் பத்தாயிரம் கிடைக்கும் என்று எதிர் பார்த்துக்கொண்டே இருந்தார். இரவு போய்க் காலை வந்தது. காலை போய் மாலை வந்தது. ஏழைக்கு வேறு பணம் எதுவும் வரவில்லை. ஏஜண்டுக்கு மனம் படபடத்தது. ஏழை எந்தக் கவலையுமில்லாமல் இருந்தார். மாலை வந்தது. வழக்கம் போல் சுவாமி தரிசனம் செய்யச் சென்றார். ஏஜண்டும் பின்னாடியே சென்றார்.

"பகவானே! நீதான் காப்பாற்ற வேண்டும்" என்று ஏழை வழக்கம்போல் பிரார்த்தித்தார். இந்தக் குரல் கேட்டதும் பரமசிவன் பிள்ளையாரைப் பார்த்து, "என்ன பிள்ளையாரே! இவனுக்குப் பத்தாயிரம் ரூபாய் கிடைக்க ஏற்பாடு செய்யச்

சொன்னேனே? என்ன ஆயிற்று?'' என்று கேட்டார். அதற்குப் பிள்ளையார், "ஏதோ மிகவும் சிரமப்பட்டு ஒன்பதாயிரத்தைந்நூறு ரூபாய் கொடுத்துவிட்டேன். அவ்வளவுதான் முடிந்தது'' என்றார்.

இதைக் கேட்டுக்கொண்டிருந்த ஏஜண்டுக்கு ஆத்திரம் வந்தது. "இது என்ன அக்கிரமம்? ஒன்பதாயிரத்தைந்நூறு ரூபாயை நான் கொடுத்திருக்கிறேன். பிள்ளையாரா கொடுத்தார்? ஒரேயடியாகப் பொய் சொல்லுகிறாரே பிள்ளையார்'' என்று கத்தினார்.

பரமசிவன் பார்த்துச் சிரித்தார். "ஐயா! நாங்கள் என்ன நோட்டு அச்சடிக்கிறோமா? பணமெல்லாம் உங்களிடம்தான் இருக்கிறது. அதை ஒருவரிடமிருந்து மற்றவரிடம் போய்ச் சேர நாங்கள் ஏற்பாடு செய்கிறோம், அவ்வளவுதான். யார் யாருக்கு எப்போது யாரிடமிருந்து கிடைக்க வேண்டுமோ அதன்படி நடக்க வழி செய்கிறோம். அது மற்றவர்களுக்குத் தெரியாது. அவ்வளவுதான், போய் வாரும்'' என்றார்.

ஏழை இதை ஒன்றும் அறியாதவராக வீடு போய்ச் சேர்ந்தார்.

ஏஜண்ட் தலையில் கையை வைத்துக்கொண்டு வீடு திரும்பினார்.

விநாயகரும் வியாசரும்

திருமுருக கிருபானந்தவாரியார்

வியாசமுனிவர் முன்பு ஒரு சமயம் கங்கைக்குக் கீழ்க்கரையிலே காசி க்ஷேத்திரத்திற்கு எதிராகக் காசியைப் போல் ஒரு நகரை உண்டு பண்ணினார்.

'மகா க்ஷேத்திரமாகிய காசிநகருக்குப் போலி ஒன்று இருக்கக்கூடாது; எது காசி என்று அறியாமல் மக்கள் இடர்ப்படுவர்' என்று வருந்திய தேவர்கள் சிந்தாமணி விநாயகரை வேண்டினார்கள்.

சிந்தாமணி விநாயகர் பிராம்மணச் சிறுவர் போல் வடிவெடுத்து வியாசரிடம் போய், புதிய காசியின் பெருமையை வினவினார். வினவிய வினாக்களுக்கெல்லாம் வியாசர் விடை கூறி வந்தார். முடிவில் விநாயகர் ஒரு விஷயத்தைப் பற்றியே பல முறை கேட்டார். வியாசருக்குக் கோபம் வந்தது.

"சுவாமி! காசியில் இறந்தால் முக்தி என்கிறார்களே; இந்தப் புதிய காசியில் இறந்தால் என்ன வரும்?'' என்று விநாயகர் கேட்டார்.

வியாசர் கோபத்தினால் விழுங்கப்பட்டிருந்த படியால், "கழுதைப் பிறப்பு வரும்'' என்றார். உடனே விநாயகர் மறைந்துவிட்டார்.



வியாசர் பெரிதும் வருந்தி, காசிவிசுவநாதரைப் பூசித்து, "சுவாமி! நான் ஏற்படுத்திய காசிக்கு ஒரு பெருமையும் இல்லையே!'' என்றார். கருணைக்கடலான விசுவநாதர் வியாசரைத் தேற்றி, "காசியில் வந்து என்னைச் சேவித்தவர் யாவரும் வியாச காசிக்கு வந்து அங்கு நீ பூசித்த மூர்த்தியைச் சேவிக்கட்டும். அங்ஙனம் சேவித்தோர் காசிக்கு வந்த முழுப் பயனைப் பெறுவர்'' என்று வரமளித்தார்.

அதனால் காசி யாத்திரை செல்பவர்கள் வியாச காசி சென்று வணங்குவது அவசியமாகும்.

கடவுளோடு வாழ்ந்தவர்

சில நாட்களுக்குப் பின் அகோரமணி தட்சிணேசுவரம் சென்று ஸ்ரீராமகிருஷ்ணருடன் சிறிது நேரம் உரையாடிய பின், பாணர் மண்டபத்தில் ஜபம் செய்ய உட்கார்ந்தார். ஜபம் முடிந்து நமஸ்காரம் செய்துவிட்டு எழுந்தார்.

அப்பொழுது பஞ்சவடியிலிருந்து வந்து கொண்டிருந்த ஸ்ரீராமகிருஷ்ணர் அங்கு வந்து, "இப்போதும் நீ எதற்காக இத்தனை ஜபம் செய்ய வேண்டும்? நிறைய உனக்குக் கிடைத்தாகிவிட்டதே?" என்று கேட்டார்.



அகோரமணி, "எனக்கு எல்லாம் சித்தியாகிவிட்டதா? ஜபம் செய்ய வேண்டாமா?" என்று கேட்டார்.

ஸ்ரீராமகிருஷ்ணர், "ஆமாம், எல்லாம் சித்தியாகிவிட்டது" என்றார்.

அகோரமணி, "எல்லாமா?" என்றார்.

ஸ்ரீராமகிருஷ்ணர், "ஆமாம் எல்லாம்" என்றார்.

அகோரமணி, "என்னவெல்லாம்? சொல்லு?" என்றார்.

ஸ்ரீராமகிருஷ்ணர், "ஆமாம். நீ உனக்காகச் செய்ய வேண்டிய ஜபதபங்கள் எல்லாம் செய்தாகிவிட்டது. ஆனால் (தமது சரீரத்தைக் காட்டி) இந்தச் சரீரம் நன்றாக இருக்கவேண்டும் என்ற ஆசை இருந்தால் நீ செய்யலாம்" என்றார்.

கோபாலனின் அன்னை, "அப்படியானால் இனி நான் செய்யப்போவது எல்லாம் உனக்காகத் தான்" என்று கூறினார்.

இதன்பின் அகோரமணி ஜபமாலை முதலியவற்றைக் கங்கையில் எறிந்துவிட்டார்.

ஆனால் நீண்ட நாட்களுக்குப் பின், 'ஏதேனும் சிறிதளவு செய்ய வேண்டாமா? இருபத்து நான்கு மணிநேரம் என்ன செய்வது?' என்ற யோசனை வந்தது. அதனால் கோபாலனின் அதாவது ஸ்ரீராமகிருஷ்ணரின் நன்மைக்காக இவர் ஜபம் செய்ய ஆரம்பித்தார்.

அகோரமணி பால்ய விதவை என்ற காரணத்தினால் கடுமையான ஆசாரங்களைக் கடைப்பிடித்து வந்தார்.

முதன்முதலில் ஸ்ரீராமகிருஷ்ணரிடம் வந்த காலத்தில் ஒரு நாள் இவர் உணவு சமைத்த பின் ஸ்ரீராமகிருஷ்ணருக்காக இலை போட்டு அன்னம் பரிமாறியபோது தற்செயலாகக் கரண்டியின் காம்பை ஸ்ரீராமகிருஷ்ணர் தொட்டுவிட்டார். அகோரமணி அன்று முழுவதும் உணவு உட்கொள்ளவில்லை.

இவர் தட்சிணேசுவரம் செல்லும்போது தமக்காக உணவு சமைக்க நேரும்போதெல்லாம், ஸ்ரீஅன்னையாரும் ஸ்ரீராமகிருஷ்ணருக்காகச் சமைத்தபின்பு அடுப்பைச் சாணம், கங்கா ஜலம் இவற்றால் சுத்தம் செய்து தருவார். அதன் பின்பே அகோரமணியின் உலை ஏறும்.

ஆனால் கோபாலனின் தரிசனம் கிடைத்த பின் அந்த பாவநிலையிலேயே நியமநிஷ்டைகள் எங்கோ சென்றுவிட்டன. கோபாலனுக்கு எப்போது என்ன வேண்டுமோ அப்போதே அதைக் கொடுக்கும்படியாக நேரிட்டது. மேலும், சாப்பிட்டுக்கொண்டிருக்கும்போதே கோபாலன், அன்னையின் வாயில் இனிப்புப்

பண்டத்தைப் போட்டுவிடுவான். அதைத் துப்ப முடியாது. துப்பிறல் கோபாலன் அழுவான். அகோரமணியின் மனதில் இது ஸ்ரீராம கிருஷ்ணரின் லீலை என்பது நன்கு விளங்கிற்று. அதன்பின் இவர் ஆகார விஷயத்தில் எவ்வித மறுப்பும் தெரிவித்ததில்லை.

ஒரு நாள் அகோரமணி ஒரு பைசாவிற்குச் சர்க்கரை மிட்டாய் வாங்கிக்கொண்டு தட்சிணேசுவரம் சென்றூர். அங்கோ பணக் காரர்களான சில பக்தர்கள் நல்ல விலையுயர்ந்த பண்டங்களைக் கொண்டு வந்திருந்தனர். அகோரமணி தாம் கொண்டு வந்திருந்த இனிப்பை ஸ்ரீராமகிருஷ்ணருக்குக் கொடுக்க வேண்டும் என்ற விருப்பம் இருந்தபோதிலும் வெட்கத்திஞல் அதை வெளியில் காட்ட வில்லை.

அப்படியும் பாவநிலையில் இருந்த ஸ்ரீராம கிருஷ்ணர் இவரிடமிருந்து இரண்டொரு மிட்டாயை எடுத்துச் சாப்பிட்டார். பின்பு வீடு திரும்பியபோது கோபாலனின் அன்னை மீதி இருந்த இனிப்புப் பண்டங்களை (அவை பிரசாதம் என்ற உணர்வு இருந்தபோதிலும்), போகும்போதும் வரும்போதும் வெளியில் எடுத்ததனுல் அவற்றின் தூய்மை குறைந்து விட்டது என்று கருதித் தோட்டக்காரனுக்குக் கொடுத்துவிட்டார்.

அதன்பின் ஒரு நாள் 'கட்தாகா' என்னும் இடத்தில் சியாமசுந்தரனைத் தரிசித்துவிட்டுத் திரும்பும்போது ஒரு பூசாரி இவருக்குப் பிர சாதம் கொடுத்தார். அதை வாங்கிக்கொண்டு அகோரமணி செல்கையில், அங்கே கோயிலின் வாயிற்படியில் நின்றிருந்த ஒரு பிராம்மணர், மிகவும் பழக்கமான குரலில், "என்ன, நீயே சாப்பிடுவாய் அல்லவா? மறுபடியும் தோட்டக் காரனுக்குக் கொடுத்துவிடுவாயோ?" என்று கேட்டார். அகோரமணி வியப்பில் மூழ்கினுர். அந்தக் குரல் ஸ்ரீராமகிருஷ்ணரின் குரல்; ஆனுல் உருவம்தான் வேறு.

அங்கிருந்து அப்படியே தட்சிணேசுவரம் சென்றவர் கண்ணீர் நிறைந்தவண்ணம், "அப்பா! நான் அபராதம் செய்துவிட்டேன். எனக்கு என்ன நேரும்?" என்று அழுதார்.

ஸ்ரீதர சுவாமிகள்

ஸ்ரீதர சுவாமிகள் பதினேராம் நூற்ருண்டில் வாழ்ந்தவர். சிறுபிள்ளையாக இருந்தபோது எழுத்தறிவற்றிருந்த இவருக்கு இறையருள் கிட்டும்படியாக அந்த நாட்டு மன்னர் நரசிம்ம மந்திரத்தை உபதேசித்தார்.

ஸ்ரீதர சுவாமிகள் தீவிரமாகச் சாதனைசெய்து கடவுள் காட்சியைப் பெற்ருர். இறைவன், "எனதருமைக் குழந்தாய் ஸ்ரீதரா! உனக்கு வேத வேதாந்தங்களில் பூரண ஞானம் உண்டா கட்டும். நான் எப்போதும் உன் உள்ளத்திலேயே வாசம் செய்வேன்" என அமுதமொழி பகர்ந்தார். இதன் பின் சுவாமிகள் பேரும் புகழுமாக வாழ்ந்தார். அரசன் சுவாமிகளை அரசவைப் பண்டிதராக ஏற்று, கௌரவம் செய்தான்.

ஸ்ரீதர சுவாமிகளுக்குத் திருமணம் நடை பெற்றது. மனைவி ஒரு குழந்தையை ஈன்றவுடன் மரணமடைந்தாள். மனைவியை இழந்த துன் பமும், இளங்குழந்தையைப் பற்றிய கவலையும் இவரைத் தளர்ச்சிக்கு ஆளாக்கின. துறவியாகச் செல்ல நினைத்தார். ஆனுல் இளம் பாலகனைப் பற்றிக் கவலையாக இருந்தது.

ஒரு நாள் ஸ்ரீதரரின் வீட்டின்முன்னுல் இருந்த மரத்திலிருந்து ஒரு பறவையின் முட்டை தவறி விழுந்து உடைந்தது. அதிலிருந்து குஞ்சு தட்டுத்தடுமாறி வெளியே வந்தது. பசியுடன் இருந்த குஞ்சைக் கண்டு மனமிரங்கினுர் ஸ்ரீதரர். அப்போது ஓர் ஈ பறந்து வந்து, முட்டையின் ஓட்டில் அமர்ந்தது. அதிலிருந்த பசையில் பற்றிக்கொண்டு பறக்க முடியாமல் தத்தளித்தது. குஞ்சு அந்த ஈயைத் தின்றது.

முட்டையிலிருந்து வெளிவந்தவுடனேயே பறவைக்கு அதன் பசியார இறைவன் இரை தந்ததை ஸ்ரீதரர் நேரில் கண்டார். அவருக்கு ஆனந்தக் கண்ணீர் பெருகியது. தமது குழந்தை யையும் பகவான் காப்பார் என்ற திட நம்பிக்கையுடன் வீட்டைவிட்டுத் துறவியாக வெளியேறினுர்.

— த. காவேரி

என்றுமே இளமையோடு இருந்த ஸ்ரீராமகிருஷ்ணர் நடந்ததைக் கேள்விப்பட்டுப் புன்முறுவல் பூத்தார்.

அகோரமணி இரண்டுமாத காலம் வரை இடைவெளியின்றி வாத்சல்ய உணர்ச்சிப் பெருக்கில் மூழ்கியிருந்தார்.

சதா பாலகோபாலனைத் தமது மடியிலும் முதுகிலும் சுமந்துகொண்டிருந்தார். இது போல நீண்ட காலம் சின்மய நாமம், சின்மய லோகம், சின்மய சியாமனின் பிரத்தியட்ச சாட்சாத்காரம் ஆகியவை அவருக்குக் கிடைத்தன. இவை பாக்கியம் செய்த வெகு சிலருக்கு மட்டுமே கிட்டும்.

இரண்டு மாதங்களுக்குப் பின் பாவநிலையின் தீவிரம் குறைந்துவிட்டபோதிலும், ஒருநிலைப் பட்ட மனதோடு நினைத்தால் மட்டுமே கோபாலனின் தரிசனம் கிடைத்தது.

அதன்பின் இவர் நடத்திய வாழ்க்கை இந்த லீலையின் வரலாறாகவே இருந்தது.

1885-ஆம் ஆண்டு ஜகந்நாத ரத யாத்திரைக்கு மறுவாரம் ஸ்ரீராமகிருஷ்ணர் பலராம் பஸுவின் வீட்டில் இரண்டு தினங்கள், இரண்டு இரவுகள் ஆனந்த அமுதவெள்ளத்தில் ஆழ்ந்திருந்தபோது, எல்லாப் பக்த பக்தைகளும் அப்பொழுது அங்கு வந்து கூடியிருந்தும் கோபாலனின் அன்னை அங்கு வராததைக் கவனித்த ஸ்ரீராமகிருஷ்ணர் சிற்றுண்டி அருந்தும்போது அந்த வீட்டுப் பெண்மணிகளுக்குத் தனி ஆசிகளைக் கூறி, "அகோரமணியை இங்கு அழைத்துவரச் செய்யுங்கள்" என்றார்.

செய்தியறிந்த பலராம் போஸ் உடனே அகோரமணியை அழைத்து வர ஆள் அனுப்பினார்.

மாலையில் ஸ்ரீராமகிருஷ்ணர் மேல்மாடியில் வரவேற்பு அறையில் பக்தர்களுடன் உரையாடிக்கொண்டிருந்தார். அப்பொழுது பாலகோபாலனைப் போல் திடீரென இருமுழங்கால்களையும் ஒரு கையையும் பூமியில் ஊன்றிக் கொண்டு, மற்றொரு கையை மேற்புறம் நீட்டி, யாரையோ எதையோ கேட்பது போல் கெஞ்சுகிற பாவனையோடு மேலே பார்த்தார் ஸ்ரீராமகிருஷ்ணர்.



பாவசமாதியின் ஆழத்தில் ஒவ்வோர் அங்கமும் படத்திலுள்ள கோபாலனைப் போல் சலனமின்றி நின்றது. கண்கள் சற்றே திறந்த வண்ணம் இருந்தன. சரியாக அதே சமயத்தில் மேலே வந்த கோபாலனின் அன்னையான அகோரமணி, தம் இஷ்ட தெய்வமான கோபாலனைத் தரிசித்தார்.

அங்கே இருந்த அனைவரும் கோபாலனின் அன்னையை, அவருடைய உயர்ந்த பக்தி காரணமாகத்தான் ஸ்ரீராமகிருஷ்ணர் சாட்சாத் கோபால வடிவத்தைத் தாங்கி வந்தார் என்று புகழ்ந்து பேசினர்.

கோபாலனின் அன்னையோ, "நானோ சமாதியில் இவ்வாறு கட்டையாகச் சமைந்துவிடுவதை விரும்பவில்லை, அப்பா! என் கோபாலன் சிரிப்பான், விளையாடுவான், சுற்றிச்சுற்றி நடப்பான், ஓடுவான். அப்பப்பா! இதென்ன! ஒரேயடியாகக் கட்டை மாதிரி இருக்கிறதே! இந்த மாதிரிக் கோபாலனைக் கண்டு எனக்கு என்ன ஆகவேண்டும்?" என்று கூறிவிட்டார்.

முதல்முறையாக ஸ்ரீராமகிருஷ்ணர் காமார் ஹாடி சென்றபோது இத்தகைய சமாதி நிலையைக் கண்ட அகோரமணி உண்மையிலேயே மிகவும் பயந்துபோய், ஸ்ரீராமகிருஷ்ணரின் மீது சாய்ந்துகொண்டு, "அப்பா! நீ இப்படி ஆகிவிட்டாயே!" என்று கூறினாராம்.

கோபாலனின் இடைவிடாத தரிசனம் முதல் முறையாக நின்று போனபொழுது கோபாலனின் அன்னை பயந்துபோய், நீர் நிறைந்த கண்களுடன் ஸ்ரீராமகிருஷ்ணரிடம் சென்று, "கோபாலா! நீ என்னை என்ன செய்து

விட்டாய்? நான் என்ன தவறு செய்தேன்? முன் போல் உன்னை ஏன் கோபாலவடிவத்தில் காண முடிவதில்லை?'' என்று கேட்டார்.

ஸ்ரீராமகிருஷ்ணர் பதிலுக்கு, ''அந்த வடிவத்தைச் சதா சர்வகாலமும் தரிசித்து வந்தால் இந்தக் கலிகாலத்தில் உடல் நிலைத்திருக்காது. இருபத்தொரு நாள்தான் உடல் இருக்கும். அதன்பின் இலைச் சருகு போல உலர்ந்து உதிர்ந்துவிடும்'' என்று கூறினார்.

கோபாலவின் தரிசனம் குறைந்துபோகும் வண்ணம் விபரீதமான ஒரு நிகழ்ச்சி நடந்தது. வாயு அதிகமாகி நெஞ்சில் கடுமையான வேதனை உண்டாகியது. ஆகையால் ஸ்ரீராமகிருஷ்ணரிடம், ''வாயு அதிகமாகி நெஞ்சில் அரம் போட்டு அறுக்கிற மாதிரி இருக்கிறது'' என்று அகோரமணிதேவி தெரிவித்தார்.

ஸ்ரீராமகிருஷ்ணர், ''அது உனக்கு நண்பனைப் போல. அதுவும் இல்லாவிட்டால் இந்த உலகில் உன்னை இழுத்து வைப்பதற்கு உனக்கு என்ன இருக்கிறது? இருக்கட்டும். மிகவும் துன்பமாக இருந்தால் ஏதாவது கொஞ்சம் சாப்பிடு'' என்று கூறிச் சமாதானப்படுத்தினார்.

இவ்விதம் கூறியபின் ஸ்ரீராமகிருஷ்ணர் அன்று அகோரமணிக்குப் பலவிதத் தின்பண்டங்களைக் கொடுத்துச் சாப்பிடச் செய்தார்.

<u>அருள்நெறிக் கதை :</u>

ஜனகர் கண்ட கனவு


நாடோடி

ஒரு சமயம் ஜனக மகாராஜர் தம் அரண்மனையில் படுத்துத் தூங்கிக்கொண்டிருந்தார். அப்பொழுது அவர் ஒரு கனவு காண ஆரம்பித்தார்.

மிதிலையை எதிரிகள் கைப்பற்றிவிட்டனர். அவரையும் ராஜ்யத்தை விட்டுத் துரத்திவிட்டனர். அது போதாதென்று அவருக்கு யாராவது இடம் கொடுத்துச் சாப்பாடு போட்டால் அவர்கள் கடுமையாகத் தண்டிக்கப் படுவார்கள் என்றும் எதிரிகள் உத்தரவு போட்டுவிட்டனர்.

ராஜ்யத்தை விட்டுக் கடத்தப்பட்ட ஜனகர் வெகு தூரம் நடந்து சென்றார். அவர் பசியால் மிகவும் அவதியுற்றார். என்ன செய்வது என்று தெரியாமல் நடந்துகொண்டே சென்று அவர் வேறொரு ராஜ்யத்தை அடைந்தார்.

அங்கு ஓர் அன்னசத்திரம் தென்பட்டது. அங்கே சென்றால் ஏதாவது ஆகாரம் கொடுப்பார்கள் என்று நினைத்து அவர் வெகுஆவலோடு போனார். ஆனால் அப்பொழுதுதான் சத்திரம் மூடப்பட்டுக்கொண்டிருந்தது.



ஜனகர் சத்திரத்து அதிகாரியிடம் சென்று தாம் மிகவும் பசியாக இருப்பதாகவும், தமக்கு ஏதாவது சாப்பிடக் கொடுத்துத் தம் உயிரைக் காக்கும்படியும் கேட்டுக் கொண்டார். அவருடைய பரிதாப நிலையைக் கண்டு இரக்கம் கொண்ட சத்திரத்து அதிகாரி, இருந்த அன்னத்தையெல்லாம் எல்லாருக்கும் போட்டு விட்டதாகவும், அவர் சம்மதப் பட்டால் சமைத்த பாத்திரத்தின் அடியில் ஒட்டிக்

குற்றமற்றவரை, ஒன்றும் அறியாதவரை, நிராகரித்துக் கண்டிப்பது எவ்வளவு வேட்கக் கேடான காரியம்!

—சாக்ரட்டீஸ்

நம்புங்கள்! அறமே ஆற்றல். அந்த நல்ல நம்பிக்கையில் நாம் அறிந்த கடமையைச் செய்வோமாக!

—ஆபிரகாம் லிங்கன்

மனிதன் மரணமடைந்தால், 'அவனுக்கு முன்னதாக அவன் எதை அனுப்பியிருக்கிறுன்?' என்று வானவர்கள் கேட்பார்கள். 'அவன் உலகில் எதை விட்டுச் செல்கிறுன்?' என்று மனிதகுமாரன் கேட்பான்.

—ஒரு சாது

கொண்டிருக்கும் அன்னத்தில் தண்ணீரை ஊற்றிச் சுரண்டிக் கொடுப்பதாகவும் சொன்னுர்.

ஜனகருக்கு இருந்த பசியில் அது கிடைத்தாலும் போதும் என்று இருந்தது. ஆகவே சத்திரத்து அதிகாரியைப் பார்த்து, அப்படியே கரைத்துக் கொடுக்கும்படியாகச் சொன்னுர். அதிகாரி அப்படியே அந்தப் பாத்திரத்தில் தண்ணீரை ஊற்றிக் கரைத்து வேறு பாத்திரத்தில் ஊற்றி அவர் கையில் கொடுத்தார். ஜனகர் வெகு ஆவலாக அதைக் குடிக்கப்போன சமயத்தில் ஒரு காகம் பாத்திரத்தைத் தள்ளிவிடவே அதிலிருந்த அன்னமும் தண்ணீரும் கீழே கொட்டிப் போய்விட்டன. இதைக் கண்ட ஜனகர் வருத்தம் தாளாமல் 'ஹோ' என்று கதறினுர்.

அவர் அப்படிக் கதறியதுதான் தாமதம், சொப்பனத்திலிருந்து விழித்துக்கொண்டார். அவரது கதறலைக் கேட்ட பட்டமகிஷிகளும், அரண்மனைச் சிப்பந்திகளும் ஓடோடி வந்து அவரைச் சூழ்ந்துகொண்டு, மகாராஜாவுக்கு என்ன ஆயிற்றோ என்று கவலையாக விசாரிக்க ஆரம்பித்தார்கள்.

கண்ணை விழித்துக்கொண்ட ஜனகர், தாம் மிதிலையில் இருப்பதையும், தாம் ராஜ்யத்தை இழக்கவில்லை என்பதையும், பிச்சைக்காரனுக மாறிப் பசியால் துடிதுடிக்கவில்லை என்பதையும் உணர்ந்தார். உடனே அவர், 'எது உண்மை? இதுவா அதுவா?' என்று எல்லோரையும் கேட்க ஆரம்பித்தார். அவர் கேட்டதன் கருத்து ஒருவருக்கும் விளங்கவில்லை. அவர் தினமும், "எது உண்மை? இதுவா, அதுவா?" என்று கேட்டுக்கொண்டிருக்கவே எல்லாரும் மகாராஜாவுக்கு பைத்தியம் பிடித்துவிட்டது என்று நினைத்தார்கள்.

உடனே அவருக்குச் சிகிச்சை செய்ய வைத்தியர்களும் மாந்திரிகர்களும் பல இடங்களிலிருந்து வந்து சேர்ந்தார்கள். ஆனுல் அவர்களால் அவரைக் குணப்படுத்த முடியவில்லை. "எது உண்மை? இதுவா அதுவா?" என்று எல்லாரையும் கேட்டுக்கொண்டேதான் இருந்தார்.

ஒரு நாள் மகரிஷி அஷ்டாவக்கிரர் மிதிலை நகர் வந்து சேர்ந்தார். அவர் நேரே ஜனக மகாராஜரைப் பார்க்க வந்தார். அவரிடமும் ஜனகர், "எது உண்மை? இதுவா, அதுவா?" என்ற கேள்வியைக் கேட்டார்.

அஷ்டாவக்கிரர் தம்முடைய யோகபலத்தினுல் மகாராஜா எதைக் கேட்கிறுர் என்பதைப் புரிந்துகொண்டார். அவர் ஜனகரைப் பார்த்துக் கேட்டார்: "மகாராஜா! தாங்கள் பிச்சைக்காரனுக இருந்து பட்டினி பொறுக்காமல் அந்த அன்னசத்திரத்துக்குச் சென்றபொழுது தங்களுடைய இந்த அழகிய அரண்மனை, தங்கள் சிப்பந்திகள், தங்கள் ராணிகள் இவர்கள் இருந்தார்களா?"

அதற்கு ஜனகர் பதில் சென்னுர்: "மகரிஷியே! அந்தச் சமயத்தில் ஆபத்தில் அகப்பட்டுக் கொண்ட நான் ஒருவன் மட்டுமே இருந்தேன். வேறு யாரும் இல்லை."

அஷ்டாவக்கிரர் திரும்பவும் கேட்டார்: "தாங்கள் விழித்துக்கொண்டு இந்த அரண்மனையில் இருப்பதை அறிந்ததும் அந்த அன்ன சத்திரம், அந்தச் சத்திரத்து அதிகாரி, தங்கள் பசி எல்லாம் இருந்தனவா?"

ஜனகர் : இவையொன்றும் இருக்கவில்லை!

அஷ்டாவக்கிரர் : அரசே! எது ஒரு காலத்தில் இருந்து ஒரு காலத்தில் இல்லாமலிருக்கிறதோ அது உண்மையான வஸ்து அல்ல. தாங்கள் விழித்துக்கொண்டிருக்கும் இந்தச் சமயத்தில் தாங்கள் சொப்பனத்தில் கண்ட வஸ்துக்களில் ஒன்றுகூட இப்போது இல்லை. ஆகவே எல்லாம் பொய் என்று ஆகிறது. அதே மாதிரி தாங்கள் கனவில் இருந்தபொழுது, இப்பொழுது காணும் இந்த வஸ்துக்கள் இல்லை. ஆகவே இவையும் பொய் என்று ஆகிறது.

ஜனகர் : அப்படியானல் எதுதான் உண்மை?

அஷ்டாவக்கிரர்: அரசனே! அந்த அன்ன சத்திரத்தின் முன்பு சாப்பாடு வேண்டுமென்று கெஞ்சிக் கேட்டீர்களே, அப்பொழுது தாங்கள் இருந்திர்களா? இல்லையா?

ஜனகர் : ஆம், நான் இருந்தேன்.

அஷ்டாவக்கிரர் : இப்பொழுது விழித்துக் கொண்டிருக்கும் சமயத்தில் தாங்கள் இருக்கிறீர்களா இல்லையா?

ஜனகர் : ஆம், நான் இருக்கிறேன்.

அஷ்டாவக்கிரர், "அரசே! விழித்துக்கொண்டிருக்கும்பொழுதும், கனவு காணும்போதும், ஆழ்ந்த நித்திரையில் இருக்கும்பொழுதும் இவை எல்லாவற்றையும் சாட்சிபோல் தாங்கள் பார்த்துக்கொண்டிருக்கிறீர்கள். நிலைகள் மாறுகின்றன; ஆனல் அந்த நிலைகளைப் பார்க்கும் தாங்கள் மாறவில்லை. ஆகவே அந்த எல்லா நிலைகளிலும் இருந்த நீங்கள்தாம் உண்மை. அதாவது உங்கள் ஆத்மாதான் உண்மை" என்ருர்.

நாமத்தின் பெருமை

துகாராம் ஓர் அனுபூதிமான். அவர் பகவானுக்கும் மக்களுக்கும் சேவை செய்து வந்தார். பகவானது திவ்யநாமத்தின் பெருமையை அவர் தமது வாழ்வில் பன்முறை நிரூபித்துக் காட்டியுள்ளார். அத்தகைய ஒரு சம்பவத்தைக் காண்போம்.

ஒரு நாள் பக்கத்துப் பக்கத்து வீட்டில் வசித்த பெண்களுக்குள் பலத்த சண்டை வந்துவிட்டது. அவர்கள் இருவரும் ஒன்ருகச் சேர்ந்து ஒரே இடத்தில் வறட்டி தட்டினுர்கள். உலர்ந்த பின் அவை ஒன்ரேடொன்று கலந்துவிட்டன. யாருடையது எவ்வளவு என்று தெரிந்து கொள்ள முடியாமல் சண்டை வந்துவிட்டது.

துகாராம் அந்த வழியாகப் போனுர். அவர் விஷயத்தைக் கேட்டபின்பு வறட்டிகளைப் பிரித்துத் தருவதாகச் சொன்னுர். எல்லா வறட்டிகளும் அவர் முன் குவிக்கப்பட்டன. அவர் ஒவ்வொன்ருகக் காதில் வைத்துப் பார்த்து, இரண்டாகப் பிரித்தார். பிறகு, "அம்மா! இருவரில் யார் வேலை செய்யும் போது 'விட்டல் விட்டல்' என்று கூறினீர்கள்?" என்று கேட்டார்.

நாமம் சொல்லிக்கொண்டே வறட்டி தட்டிய பெண் முன்னுல் வந்தாள். "அம்மா! இடப் பக்கம் உள்ள குவியல் உன்னுடையது. வலப் பக்கம் உள்ளது மற்றவளது" என்ருர்.

வேடிக்கை பார்க்கக் கூடியிருந்தோர், "சுவாமி, இது எப்படி?" என வினவினர்.

"நாம் நாமம் சொல்லும்போது, நாம அலைகள் சுற்றுப்புறம் முழுவதும் பரவும். நாம அதிர்வுகள் இந்த வறட்டிகளில் உள்ளன. அதைக் கேட்டு அவற்றைப் பிரிக்க முடிந்தது" என்ருர் துகாராம்.

நாமஜபம் செய்ய இடம் நேரம் பார்க்க வேண்டியதில்லை. நாமஜபம் நமக்கு நன்மை செய்வதோடு சுற்றுச் சூழ்நிலையையும் தூய்மையாக்குகிறது. நாம் இடைவிடாமல் நாமஜபம் செய்தல் வேண்டும்.

— த. காவேரி

சாரதாதேவி—ஓர் இந்திய லட்சியப் பெண்

சுதா மல்லையா

ஸ்ரீராமகிருஷ்ண மிஷன் சாரதா வித்யாலயா
கிரிபித் ஹையர் செகண்டரி ஸ்கூல்
சென்னை-17

ஸ்ரீராமகிருஷ்ண சேவா சங்கத்தின் சார்பாகப் பத்தாம் வகுப்புப் பள்ளி மாணவ மாணவியருக்கு நடைபெற்ற கட்டுரைப் போட்டியில் பரிசு பெற்ற கட்டுரை இது.

புனிதமான பெண்களின் பேரியல்புகளைப் பழமையான புராணங்கள் அனைத்தும் தங்கள் நாயகிகள் மூலம் எடுத்துக்கூறுவதை நாம் அறிவோம். அந்த ஒப்பற்ற பண்புநலன்களை அணிகலன்களாகப் பூண்டு பாரதத்தின் அன்னையாகவும் பெண்ணரசியாகவும் விளங்குகிறார் சாரதாதேவியார்.

சாரதாதேவியார் தமது ஆறாவது வயதில் ஸ்ரீராமகிருஷ்ணருக்கு மனைவியாக வாழ்க்கைப் பட்டார்.

ஸ்ரீசாரதாதேவியாரே ஸ்ரீராமகிருஷ்ணரின் பத்தினித் தெய்வமும் முதல் சிஷ்யையும் ஆவார். அவர் கன்னியருக்கும் தாய்மாருக்கும் விதவையருக்கும் இலக்கியம்; தேவியின் அவதாரம். அவரது வாழ்வில் தூய்மையும் எளிமையும் பக்தியும் ஞானமும் தொண்டும் நிறைந்துள்ளன. உலக மக்களுக்கு அவர் ஒரு ஞானத்தாய்; இந்தியப் பெண்களுக்கு இலக்கியம்; அவரது திருவாக்கு ஞான தீபம்; சக்திக்கு ஊற்று; இன்பப் பெருக்கு; சாதகருக்கு ஞான அமுதம்.

ஸ்ரீராமகிருஷ்ணரின் துறவியலுக்கு ஏற்றவாறே தேவியார் தமது வாழ்க்கையை அமைத்துக் கொண்டார். அதை விளக்கும் நிகழ்ச்சி ஒன்றை இங்கே குறிப்பிடலாம்.

ஸ்ரீராமகிருஷ்ணரிடம் பேரன்பு கொண்டிருந்த லக்ஷ்மீநாராயணன் என்னும் மார்வாரிச் சீமான் குருதேவரின் வசதிக்காகப் பத்தாயிரம் ரூபாயை வங்கியில் போட முன்வந்தார். அதை குருதேவர் ஏற்க மறுத்துவிட்டார். தேவியின் மனப்பான்மையைச் சோதிக்கவோ என்னவோ பரமஹம்சர் அந்த மார்வாரியைத் தேவியிடம் அனுப்பினார். தேவியும் அந்தப் பணத்தை ஏற்றுக்கொள்ள மறுத்துவிட்டார். தாம் அந்தப் பெரிய தொகையை ஏற்றால் அதைப் பரமஹம்சருக்காகவே செலவுசெய்ய வேண்டும்; அது குருதேவர் அந்தத் தொகையை ஏற்றதற்குச் சமமாகும் என்பது தேவியாரின் எண்ணம்.

வறுமை காரணமாகத் தேவியார் தமது வாழ்வின் ஒரு பகுதியை உண்ண உணவின்றிச் சங்கடப்பட்டதை நினைக்கும்போது அவரது தியாகம் எவ்வளவு பெரியது என்பது தெளிவாக விளங்குகிறது. தியாகத்தின் வடிவமான தமது தெய்விகக் கணவரின் நெறியிலிருந்து நூலிழையும் புறம்பாகச் செல்ல அவர் மனம் ஒப்பவில்லை.

பெண்களுக்கு எழிலளிக்கும் பண்பு நலன்களைத் தேவியார் தாமாகத் தேடிச் சென்றடையவில்லை. அவை தாமாகவே இவரிடம் குடிகொண்டிருந்தன. ஒரு பெண்ணுக்கு அடக்கமே சிறந்த அணிகலன் என்பதைத் தமது வாழ்வில் அன்னையார் விளக்கினார்.

சொல் செயல் சிந்தை ஆகிய மூன்றிலும் இவர் என்றும் பணிவின்றி நடந்ததில்லை.

அமரருள் உய்க்கும் அடக்கத்தால் மலையினும் மாண்புடையவரானார் அன்னையார். ஐம்புலன்களையும் அடக்கி, அல்லாத வழியில் செல்லும் பொல்லாத மனதை அடக்கி ஒப்பற்ற துறவியாக இவர் திகழ்ந்தார்.

தன்னந்தனியாக இவர் வாழ்ந்து வந்த காலத்தில், ஹரீசன் என்பவன் ஸ்ரீராமகிருஷ்ணரின் சீடன் என்று பொய் சொல்லிக்கொண்டு கெட்ட எண்ணத்துடன் வந்து ஒரு நாள் தேவியைத் தாக்கினான். அன்னையார் வீரா

வேசத்துடன் அவன் நெஞ்சில் ஒரு காலை நாட்டி அவன் முகத்தில் நையப் புடைத்தார். பல மின்மையும் பயங்கொள்ளித்தனமும் ஒரு பெண்ணுக்கு இருத்தல் கூடாது. வேண்டிய போது வீரம் வகிக்க வேண்டிய வலிமையும் சமயோசித புத்தியும் பெண்களுக்கு இன்றி யமையாதனவாகும்.

மிகையாகப் பேசுவது தேவியிடம் கிடையாது. அன்பும் அனுதாபமும் ஊறிய இவரது இன் மொழிகள் நெடுநாள் புண்பட்டிருந்த மனதைப் பண்படுத்திவிடும். சோம்பலுற்ரோர் சுறுசுறுப் படைவர். துன்புற்ரோர் தெளிந்து இன்பம் துய்ப்பர்.

பாரதப் பெண்மை என்ற பாற்கடலில் திரண்ட சத்தாகத் தோன்றிய திருமக ளாவார் இவர். உபதேசங்களைவிட இவரது ஒப்பற்ற வாழ்க்கையே இவர் உலகுக்குத் தந்த செய்தியாக விளங்குகிறது.

பொறுமை என்ற நகையே பெண்களுக்கு அழகு தரும். ஆனல் தேவியாரின் பொறுமை பெருமையை விளைவிக்கவில்லை; இவரே பொறுமையின் சிகரமாகத் திகழ்ந்து அதற்குப் பெருமை சேர்த்தார். சிறு வயது முதலே இந்தப் பண்புகளுக்கெல்லாம் நடுநாயகமாய் விளங்கியது மற்ருெரு பண்பு. அதுதான் தன்னலமற்ற தூய அன்பால் இந்தத் தரணி முழுவதையும் அரவணைக்கும் தாய்மைப் பண்பு. காமத்திற்கு உட்பட்டு இவர் வாழவில்லை. உலக மக்களைப் போல் இவர் மக்கட்பேறு அடையவில்லை என்ருலும் தூய அன்பினல் உலக மக்கள் அனைவரையுமே தமது குழந்தை களாக்கிக் கொண்டார். ஸ்ரீராமகிருஷ்ணர் சீடர்களுக்குக் குருதேவராக மட்டுமே விளங் கினர். சாரதாதேவியாரோ தமது ஒப்பற்ற அன்பினல் சீடர்களுக்கு அன்னையாகவும் குரு வாகவும் திகழ்ந்தார். 'அம்மா!' என்று அழைத்து வருவோரை இவர் என்றும் கலங்க விட்டதில்லை. இத்தகைய தாய்மைப் பண்பும் மாசற்ற அன்புமே இவரை அகிலமெல்லாம் போற்றும் தூய அன்னையாக ஆக்கின.

வார்த்தையால் வடிக்க இயலாத அற்புத ஆன்மிக சரித்திரத்தைத் தாம் வாழ்ந்த வாழ்க் கையின் மூலம் படைத்திருக்கிருர் நம் அன்னையார். இவரது காரணமற்ற கருணையைத் தான் என்னென்பது?

தமிழா! ஒருவேளைச் சோற்றை விட்டா லும் விடு; ஆனல் தினமும் தியானம் செய் வதை நிறுத்தாதே! —மகாகவி பாரதியார்

சாந்தத்திற்குச் சமமான தவம் வேறில்லை. சந்தோஷத்தைத் தவிர வேறு சுகமில்லை. ஆசையைவிட வேறு வியாதி இல்லை. தயை, கருணை இதைக் காட்டிலும் வேறு தர்ம மொன்றில்லை. —ஒரு சுலோகம்

இவரைப்பற்றி எண்ணுவதும் எழுதுவதும் பெரும் புண்ணியமாகும்.

அதிசய சுமங்கலி, அதிசயத் துறவி, அதிசய குரு. அதிசயங்களை எல்லாம் விழுங்கிவிட்டு அதிசயமல்லாத சாமானிய அம்மாவாகவே உலகுக்குக் காட்சியளித்தார் அன்னையார்.

அன்புக்கு ஆதர்சமாகவும், உழைப்பிற்கு உறைவிடமாகவும், பெண்மைக்கு இலக்கண மாகவும், எளிமைக்கு உருவாகவும், அடக்கத் திற்கு அணியாகவும், தூய்மைக்குத் தாயாகவும் விளங்கினர் அன்னையார்.

இந்த புவியில் அறுபத்தாறு ஆண்டுகள் உலவிய இவரது பூத உடலின் நுண் அணுக்கள் இந்தப் புண்ணிய பாரத மண்ணுள் ஊறி உறைந்துள்ளன.

இவ்வாறு அடக்கமும் பொறுமையுமே அணி களாய், உழைப்பே உயிர்மூச்சாய், அறிவும் எளிமையும் இணைந்த ஒப்பில்லாத அன்னையாக, தாய்மைக்கோர் ஒப்பற்ற விளக்கமாகத் திகழ் கிருர் சாரதாதேவியார். குணமென்னும் குன்னேறி நின்று பெண்மையின் பொலிவுகள் அனைத்தும் ஒன்றிணைந்த மாதரசியாகத் திகழ் கிருர். இன்றைய பாரத யுவதிகளுக்கு வழி காட்டும் ஒளிவிளக்காகத் திகழ்கிருர். அமைதி யின் வடிவாயும் அன்பின் உருவாயும் அடக் கத்தின் சிகரமாயும் தாய்மையின் இலக்கண மாயும் தூய்மையின் அணியாயும் திகழும் தூய அன்னை காட்டிய வழியில் சென்று நாம் சிறப்படைவோமாக!

மத மாற்றம் பற்றி விவேகானந்தரின் கருத்து

[இது 1899-ஆம் ஆண்டு ஏப்ரல் மாதத்தில் 'ப்ரபுத்த பாரத' இதழில் வெளியானது.]

'ப்ரபுத்த பாரத' பத்திரிகையின் நிருபர் பின்வருமாறு எழுதுகிருர்:—

பிற மதத்தினரை ஹிந்து மதத்தில் சேர்க்கும் பிரச்னையைப்பற்றி, சுவாமி விவேகானந்தரைப் பேட்டி காணும்படி, எனக்கு என் பத்திரிகை ஆசிரியர் கட்டளையிட்டார். ஒரு நாள் மாலை ஒரு படகுவீட்டின் மேல்தளத்தில் எனக்கு அந்த வாய்ப்புக் கிடைத்தது.



இரவு சூழ்ந்துவிட்டது. ராமகிருஷ்ண மடத்தை அடுத்த கங்கைக் கரையோரத்தில் படகை நிறுத்தினேம். என்னுடன் பேசுவதற்காக, சுவாமிஜி கீழே இறங்கி வந்தார். இன்பமான நேரம்; மகிழ்ச்சியைத் தரக்கூடிய இடம்; தலைக்கு மேல் வானத்தில் நட்சத்திரங்கள் ஒளிவீசிக்கொண்டிருந்தன; எங்களைச் சூழ்ந்து புனித கங்கைநதி புரண்டோடிக் கொண்டிருந்தது. மங்கிய ஒளியில் ஒரு கட்டிடம் காட்சி தருகிறது. அதன் பின்னணியில் பனை மரங்களும், ஓங்கி வளர்ந்த நிழல் தரும் மரங்களும் இருந்தன.

"நம்முடைய ஹிந்து மதத்திலிருந்து வெளியேறியவர்களை மீண்டும் நாம் சேர்த்துக் கொள்ளலாமா என்பதுபற்றிப் பேசுவதற்காக நான் தங்களைக் காண வந்திருக்கிறேன்" என்று நான் பேச்சை ஆரம்பித்தேன்.

"ஆமாம்; அவர்களைச் சேர்த்தே தீர வேண்டும்; சேர்த்துக்கொள்ளவும் முடியும்" என்று சுவாமிஜி கூறிவிட்டு, ஒரு கணம் ஆழ்ந்த சிந்தனையில் தீவிரமாக ஈடுபட்டிருந்தார்.

பின்பு பேச்சைத் தொடர்ந்தார்: "இப்படிச் செய்யாமற் போனுல், நாம் ஜனத்தொகையில் குறைந்துகொண்டே போய்விடுவோம். முஸ்லிம்கள் முதன்முதலாக நம் நாட்டுக்கு வந்தபோது நாம் அறுபது கோடி ஹிந்துக்கள் இருந்தோம் என்று சொல்லப்படுகிறது. முஸ்லிம் சரித்திர ஆசிரியர்களுள் மிகவும் பழையவரான ஃபெரிஷ்டா என்பவர் கூறும் ஆதாரத்தைக் கொண்டு இவ்விதம் சொல்கிருர்கள். இப்போது ஹிந்துக்களாகிய நாம் ஜனத்தொகையில் வெறும் இருபது கோடி மக்களாகக் குறைந்து போயிருக்கிறேம். இதுமட்டுமின்றி ஹிந்து மதத்தை விட்டு ஒருவன் வெளியே சென்று வேறொரு மதத்தில் சேர்ந்துவிடுவானுனல், ஹிந்துக்களாகிய நமது எண்ணிக்கையில் ஒருவன் குறைந்துவிட்டான் என்பது மட்டுமல்ல; நமது எதிரிகளில் ஒருவன் அதிகமாகி விட்டான் என்றும் ஆகிவிடும்.

"முஸ்லிம் மதத்தையோ கிறிஸ்தவ மதத்தையோ தழுவிய ஹிந்துக்களில் பெரும்பாலோர் வாளுக்குப் பயந்தே மாறியிருக்க வேண்டும். அல்லது அப்படிப்பட்டவர்களின் பரம்பரையில் பிறந்திருக்க வேண்டும். இப்படிப்பட்டவர்களை எந்த விதமான இன்னலுக்கும் ஆளாக்குவது நேர்மையல்ல என்பது கண்கூடு. பிறவியிலேயே அந்நியர்களாக உள்ளவர்களை என்ன செய்யலாம் என்று நீங்கள் கேட்கலாம். கூட்டம் கூட்டமாகப் பண்டைக் காலத்தில் திரும்ப மாற்றப்பட்டிருக்கிருர்களே! அந்த வேலை இன்னமும் நடந்தே வருகிறது.

"எனது சொந்தக் கருத்துப்படி, வனவாசிகளான பரம்பரையினரின் கூட்டங்களையும், சுற்றிலுள்ள நாட்டு மக்களையும், முஸ்லிம்கள் வெற்றி பெறுவதற்கு முன்னர், நம்மை வென்ற

மக்களில் அநேகமாக எல்லோரையும் மதம் மாற்றியிருக்கிறோம். அது மட்டுமின்றி, விசேஷமாகப் புராணங்களில் காணப்படுகிற எல்லா ஜாதிகளும் மதம் மாற்றப்பட்டவர்கள்தாம் என்பது எனது சொந்தக் கருத்து. அவர்கள் அந்நியர்களாக இருந்தவர்கள். பின்பு ஹிந்துக்களாக ஏற்றுக்கொள்ளப்பட்டவர்கள் என்றே கருதுகிறேன்.

''தாமாக மனம் ஒப்பிப் பிறமதம் மாறிவிட்டு இப்போது தாயகமான தமது தாய்க் கோவிலுக்குத் திரும்பி வர விரும்புகிறவர்களுக்குப் பிராயச்சித்தச் சடங்குகள் பொருத்தம்தான். ஆனால் காஷ்மீர், நேபாளம் போன்ற இடங்களில் எதிரிகளின் படையெடுப்பால் அந்நிய மதத்தவராக்கப்பட்டவர்களுக்கும் அல்லது நம்முடைய மதத்தைத் தழுவ விழைகிற வெளியாருக்கும் யாதொரு பிராயச்சித்தமும் விதிக்கக் கூடாது.''

''சுவாமிஜி, இவர்கள் எந்த ஜாதியினரைச் சேர்ந்தவர்களாக இருப்பார்கள்?'' என்று நான் துணிந்து கேட்டேன்; ''ஏதாவதொரு ஜாதி இருக்க வேண்டும். இல்லாமற் போனால் பரந்த இந்த ஹிந்து மத உடலோடு அவர்கள் ஒரு போதும் ஒன்றி இணைய முடியாதல்லவா? அவர்களுக்கு உரிய தக்க இடத்தை நாம் எங்கே தேடலாம்?''

சுவாமிஜி அமைதியாகக் கூறினார்: ''நம் மதத்தில் மீண்டும் சேருகிறவர்கள் தங்கள் சொந்த ஜாதியையே பெறுவார்கள். புதியவர்கள் தங்களுக்கு உரிய ஜாதிகளை ஏற்படுத்திக் கொள்வார்கள். வைஷ்ணவத்தில் இந்த முறை பின்பற்றப்பட்டிருக்கிறது என்பது உங்களுக்கு நினைவிருக்கும். வேறு வேறு ஜாதிகளிலிருந்து வந்தவர்களும், ஹிந்துக்களாக மதம் மாற்றப்பட்ட அந்நியர்களும், அதன் கொடிக்கீழ் இணைந்து ஒரு தனி ஜாதியாக, கௌரவம் வாய்ந்த ஒரு ஜாதியாக, வைணவம் உள்ளது. அந்த இனம் மிகவும் போற்றுதற்கு உரியது. ராமானுஜர் முதல், வங்கத்தில் கிருஷ்ண சைதன்யர் வரையில் திகழ்ந்த பெரிய வைஷ்ணவ ஆசாரியர்கள் இந்த முறையையே கடைப்பிடித்திருக்கிறார்கள்.''

''புதிதாக வந்த இவர்கள் எங்கே திருமணம் செய்து கொள்வார்கள்?'' என்று நான் சுவாமிஜியை வினவினேன்.

''இப்பொழுது செய்துகொள்வது போலவே, தமக்குள்ளேயே செய்துகொள்வார்கள்'' என்று சுவாமிஜி அமைதியாகப் பதிலளித்தார்.

''அவர்கள் எந்தப் பெயரை வைத்துக் கொள்வார்கள்? அந்நியர்களும், பிற மதத்தைத் தழுவிப் பிறகு திரும்பி வருகிறவர்களும் புதிதாகப் பெயர் வைத்துக் கொள்ள

வைராக்கியம்

பல நாடுகளையும் வென்றபின் விரக்தி தோன்ற, சாதுக்களின் தரிசனத்திற்கு விருப்பமுற்றான் அலெக்சாண்டர். தன் மந்திரிகளை அழைத்து, சாதுக்களை வந்து சம்மானம் பெற்றுப் போகும்படி கூறினான். சாதுக்கள் தமக்கு ஏதும் தேவையில்லை எனக் கூறிவிட்டனர்.

சான்றோர் ஒருவரை எப்படியும் சந்திக்க விரும்பிய அலெக்சாண்டர் ஒரு முனிவரைக் காணத் தகுந்த மரியாதையுடன் சென்றான். அந்த அவதூதர் உள்முக நோக்கில் அமர்ந்திருந்தார். அரசனது பரிவாரங்களின் ஆரவாரம் அவரை விழித்துப் பார்க்கச் செய்தது. பணியாட்கள் அவரிடம் அலெக்சாண்டரின் பெருமைகளைக் கூறி, அவர் தரும் பரிசுகளை ஏற்றுக்கொள்ளும்படி வேண்டினர். ''இவற்றுள் எதுவும் எனக்குத் தேவையில்லை. என் தேவைகளைப் பகவான் பூர்த்திசெய்கிறார்'' என்றார் சாது.

அலெக்சாண்டர், ''என்னைச் சந்திக்கும் யாரும் வெறுங்கையுடன் திரும்புவதில்லை. நீங்கள் ஏதாவது என்னிடமிருந்து பெற்றே ஆக வேண்டும்'' என்றான்.

அந்த மகான், ''அப்படியா? குளிருக்கு இதமாக வெயில் காய்ந்துகொண்டிருக்கிறேன். நீ சூரிய ஒளியை மறைத்துக்கொண்டு நிற்கிறாய். சற்று விலகினால் அதுவே போதும்'' என்றார்.

அலெக்சாண்டர் உண்மைத் துறவின் பெருமையை உணர்ந்தான்.

— த. காவேரி

வேண்டுமே. அவர்களுக்கு ஜாதிப் பெயர்களைத் தருவீர்களா அல்லது வேறு ஏதாவது செய்வீர்களா?'' என்று சுவாமிஜியைக் கேட்டேன்.

"உண்மைதான். பெயரில் பெரும் பொருள் இருக்கத்தான் இருக்கிறது'' என்று சொல்லிக் கொண்டே சிந்தனையில் ஆழ்ந்த சுவாமிஜி, இந்தக் கேள்விக்குப் பதிலாக ஒன்றும் கூறவில்லை.

ஆனால் நான் கேட்ட அடுத்த கேள்வி அவரைத் தூண்டி வேகப்படுத்தியது: ''சுவாமிஜி! பல வடிவங்கள் வாய்ந்த ஹிந்து மதக் கொள்கைகளிலிருந்து தமக்கு வேண்டிய ஓர் அமைப்பைத் தேர்ந்தெடுக்கும்படிப் புதிதாக வந்த இவர்களை விட்டுவிடுவீர்களா அல்லது அவர்களுக்காக ஒரு சமய வடிவத்தை அமைத்துத் தருவீர்களா?''

"என்ன கேள்வி கேட்டீர்கள்? அவர்களே தாம் தேர்ந்தெடுத்துக் கொள்ள வேண்டும். அவர்களே தேர்ந்தெடுத்துப் பின்பற்றுவிட்டால் ஹிந்து மதத்தின் உட்சக்தியே குலைந்து போய்விடும். நம் ஹிந்து மதத்தின் சாரமே இஷ்ட தெய்வத்தைத் தேர்ந்தெடுத்துக் கொள்கிற இந்தச் சுதந்திரத்தில்தான் அடங்கியுள்ளது.''

அவர் கூறியதில் இது மிகுந்த கருத்தாழம் வாய்ந்தது என்று நான் நினைத்தேன். என் முன் நின்ற அந்த மகான் உயிரோடிருக்கிற மற்றவர்களைக்காட்டிலும், பல ஆண்டுகள் ஆன்மிகத் துறையில் பாடுபட்டு உழைத்திருப்பவர். ஹிந்து மதத்தின் பொதுவான அடிப்படைத் தத்துவங்களைப் பார்த்தால், அவரவர் இஷ்டத்துக்குச் சுதந்திரம் அளிக்கிற இந்தத் தத்துவம் உலகம் முழுவதையும் தழுவி நிற்கக்கூடிய அளவுக்குப் பெரியதாகத் திகழும் என்று எனக்குத் தோன்றுகிறது.

பேச்சு, பல பொருள்களைப்பற்றி அமைந்திருந்தது. அதற்குப் பிறகு இன்முகத்துடன் எனக்கு நல்வாழ்த்துக் கூறி விடைபெற்றுக் கொண்டு, பெரும் சமய ஆசாரியரான சுவாமிஜி, விளக்கைக் கையிலேந்திய வண்ணம் மடத்திற்குள் திரும்பிச் சென்றார். பாதையல்லாத பாதைகளையுடைய கங்கையாற்றிலே பல வடிவங்களையுடைய பெரிய படகுகளுக்கிடையில் நான் செல்ல வேண்டிய படகு வழி செய்துகொண்டு கல்கத்தாவை நோக்கிச் சென்றது. நான் என் கல்கத்தா வீட்டுக்குத் திரும்பினேன். ●

காளிதாசர்

காளிதாசர் போஜராஜனின் சபையில் சிறந்த புலவராவார். பாமரராக இருந்தவர் காளி தேவியின் அருளால் புலமை பெற்றார். ரகுவம்சம், குமாரசம்பவம், மேகதூதம் போன்ற சம்ஸ்கிருத நூல்களை இயற்றினர். போஜராஜனின் சபையில் தண்டி என்ற புலவரும் இருந்தார். அவர் தாம் காளிதாசரைவிடச் சிறந்தவர் என்று பெயர் வாங்க விரும்பினர்.

போஜராஜன், "நாளை நான் ஒரு கேள்வியைக் கேட்பேன். பொருத்தமான பதில் தருபவரைச் சிறந்த புலவர் எனப் பிரகடனம் செய்வேன்'' என்றான். தண்டி இரவெல்லாம் சரஸ்வதியின் அருளை வேண்டிப் பிரார்த்தனை செய்தார். சரஸ்வதி தேவி தோன்றி, "என்ன வேண்டும்?'' என்று வினவ, தண்டி, "தாயே, நாளைக் காலையில் அரசவையில் தோன்றி நான் சிறந்த புலவன் என்று கூற வேண்டும்'' என்றார். தேவி ஒப்புக்கொண்டாள்.

மறுநாள் அரசவை கூடியது. எல்லோரும் ஆவலுடன் அமர்ந்திருந்தனர். திடீரென்று, 'கவிர் தண்டீ' என மூன்று முறை அசரீரி கேட்டது. 'தண்டி பெரும் பண்டிதன்' எனக் கேட்ட ஜனங்கள் ஸ்தம்பித்து நின்றனர்.

ஆனால் காளிதாசர் இதை ஒப்புக்கொள்ளத் தயாராக இல்லை. கண் சிவக்க, கோபக்கனல் தெறிக்க எழுந்து நின்று தம்மை அறியாமல் தேவியை வசைபாட ஆரம்பித்தார். அவை தேவிக்குப் பிரியமான பாடல்களாயின. அதனால் மகிழ்ந்த தேவி, ஆகாசவாணியாக, "எனதருமைக் காளிதாசா! தண்டி பெரும் புலவனாக இருந்துவிட்டுப் போகட்டும். உனக்கு ஏன் அதில் வருத்தம்? நீ நானே. த்வமேவாஹம்'' என்று மொழிந்தாள். இதைக் கேட்ட தண்டி வெட்கித் தலைகுனிந்தார்.

— த. காவேரி

மனுஸ்மிருதியில் சில கருத்துக்கள்

தமிழில் : 'அண்ணா' சுப்ரமண்யம்

1. போதும் என்ற உள்ளமும் புலனடக்கமும் உடையவனாக, சுகத்தை விரும்புபவன் இருக்க வேண்டும். சந்தோஷத்தை வேராக உடையது சுகம். அதற்கு எதிரானது துக்கத்திற்கு வேர்.

2. வேதம் கூறியுள்ள ஸ்வதர்மத்தை ஒருவன் நாள்தோறும் சோம்பலில்லாமல் அனுஷ்டிக்க வேண்டும். சக்திக்கு ஏற்றவகையில் அதைச் செய்வதனால் ஒருவன் உத்தமமான கதியை அடைவான்.

3. இந்திரிய விஷயங்கள் அனைத்திலும் காமத்தால் பற்றுக் கொள்ளாமல் விலக வேண்டும். இவற்றில் பற்றின் மிகுதியை மனதினால் ஆராய்ந்து அதினின்று விடுபட வேண்டும்.

4. நீர்நிலைகளில் மூத்திரத்தையோ மலத்தையோ கோழையையோ எச்சில் பட்ட வேறு பொருள்களையோ இரத்தத்தையோ விஷத்தையோ விடக்கூடாது.

5. ஈரக் காலுடன் புசிக்க வேண்டும். ஈரக் காலுடன் படுக்கக் கூடாது. ஈரக் காலுடன் புசிப்பவன் நீண்ட ஆயுளை அடைவான்.

6. பிராம்ம முகூர்த்தம் என்ற விடியற் காலையில் விழித்துக்கொண்டு அறம் பொருள் ஆகியவை பற்றிச் சிந்திக்க வேண்டும். அதனால் ஏற்படக்கூடிய உடலுழைப்பைப் பற்றியும் எண்ணிப் பார்க்க வேண்டும். அவ்வாறே வேதத்தின் உட்பொருளைத் தியானம் செய்ய வேண்டும்.

7. பின்பு படுக்கையை விட்டு எழுந்திருந்து அவசியமானதைச் செய்து நீராடுவதை முடித்துப் பரிசுத்தமாகக் காலைச் சந்தியா வந்தனத்தை உரிய சமயத்தில் செய்து அதற்குப் பின் நீண்ட நேரம் நின்றுகொண்டு ஜபம் செய்ய வேண்டும்.

8. ரிஷிகள் நீண்ட நேரம் சந்தியாவந்தனத்தால் நீண்ட ஆயுளையும், நல்ல அறிவையும், நல்ல பெயரையும், பிரம்ம தேஜஸ்ஸையும் அடைந்தார்கள்.

9. பகைவனுடனும், பகைவனுக்கு உதவி செய்பவனுடனும், தருமவழியிலிருந்து நீங்கியவனுடனும், திருடனுடனும், பிறன் மனைவியுடனும் நெருங்கிப் பழகக் கூடாது.

10. பிறன் மனைவியுடன் கூடுதலைப் போல் ஆயுளை அழிக்கும் செயல் ஒரு புருஷனுக்கு இந்த உலகில் வேறெதுவுமே இல்லை.

11. முன்பு செய்த தொழில்களால் நிறைவு ஏற்படாவிட்டாலும் ஒருவன் தன்னைத் தானே அவமதித்துக்கொள்ளக் கூடாது. சாகும் வரையில் செல்வத்தைத் தொடர்ந்து தேட வேண்டும். அதைப் பெறுவது கடினம் என்று எண்ணக்கூடாது.

12. உண்மையைப் பேச வேண்டும். அதையும் பிரியமாகப் பேச வேண்டும்; பிரியமில்லாத உண்மையைச் சொல்லக்கூடாது. பிரியமிருந்தாலும் பொய்யைச் சொல்லக்கூடாது. இது பழமையான தர்மம்.

13. அங்கம் குறைந்தவர், அங்கம் மிகுந்தவர், படிப்பில்லாதவர், வயதானவர், அழகிலும் பொருளிலும் குறைந்தவர், ஜாதியில் தாழ்ந்தவர் ஆகியோரை இழிவாகப் பேசக் கூடாது.

14. நோயற்றவன் காரணமில்லாமல் தன் காது மூக்கு வாய் முதலிய இந்திரியங்களைத் தொடக்கூடாது. மயிர்களையும் ரஹஸ்ய ஸ்தானங்கள் அனைத்தையும் தொடுவதைத் தவிர்க்க வேண்டும்.

15. எப்போதும் வேதத்தை அப்பியாஸம் செய்வதனாலும், பரிசுத்தமாக இருப்பதனாலும், தவம் செய்வதனாலும், உயிர்களுக்கு வஞ்சனை செய்யாமலிருப்பதனாலும் முந்திய பிறவியின் ஞாபகத்தை ஒருவன் அடைகிறான்.



மூன்று கண்கள்

கி. வா. ஜகந்நாதன்

சிவபெருமான் மூன்று கண்களை உடையவன். பிறரெல்லாம் இரண்டு கண்களே படைத்திருக்க அந்தப் பெருமான் நெற்றியில் குறுக்கே தோன்றும் மூன்றாவது கண்ணை உடையவனாக இருக்கிறான். "நெற்றிமேல் ஒற்றைக்கண் உடையார் போலும்" என்று அப்பர் பாடுவார். மற்றக் கண்களைப் போல இராமல் அது வேறு வடிவில் இருப்பதனால் சிவபெருமானுக்கு 'விரூபாட்சன்' என்ற திருநாமம் உண்டாயிற்று.

அந்த மூன்றாவது கண் எப்போதுமே திறந்திருப்பதில்லை. வேண்டும்போது திறந்து ஆற்ற வேண்டியதை ஆற்றும். அந்தக் கண் ஞானக் கண். அதை உடைய பெருமான் பேராற்றல் உடையவன். "நெற்றிமேல் கண்ணை உடையவனோ?" என்று உலக வழக்கில் கேட்கும் கேள்வி அதைப் படைத்தவன் பிறருக்கு இல்லாத ஆற்றலை உடையவன் என்பதைக் குறிப்பிக்கும்.

ஒரு காலத்தில் மூன்று அசுரர்கள் மூன்று பறக்கும் கோட்டைகளை உடையவர்களாய் ஊருக்குத் தீங்கு இழைத்து வந்தனர். அந்த மூன்று புரங்களையும் இறைவன் அழித்தான். அதனால் 'திரிபுராரி' என்ற திருநாமம் அவனுக்கு அமைந்தது.

திரிபுர சங்காரம் எவ்வாறு நடந்தது? பல வேறு வகையில் நிகழ்ந்ததாக அருளாளர்கள் பாடியிருக்கிறார்கள் என்பதை முன்பே பார்த்திருக்கிறோம். அம்பை எய்து அழித்தான் என்றும், விழித்து எரித்தான் என்றும், சிரித்து எரித்தான் என்றும் மூன்று வேறு வகையில் சொல்வதுண்டு. சிரித்து எரித்தான் என்பதே பெருவழக்கு.

காரைக்கால் அம்மையார் இப்போது விழித்து எரித்ததாகச் சொல்ல வருகிறார். நெற்றிக் கண்ணைத் திறந்து பார்த்து மன்மதனை எரித்ததாகச் சொல்வது ஒரு வரலாறு. அதே நெற்றிக் கண்ணால் திரிபுரங்களை அழித்தான் என்ற வரலாறும் உண்டு.

ஆனால் அம்மையார், மூன்று புரங்களையும் தன்னுடைய மூன்று கண்களாலும் பார்த்து எரித்தான் என்ற செய்தியைச் சொல்கிறார். இறைவனுடைய மூன்று திருவிழிகளைப் பற்றிச் சிந்திக்கும்போது இந்தப் பராக்கிரமச் செயலைக் குறிப்பிடுகிறார்.

நல்லவர்களுக்கெல்லாம் பகைவர்களாக இருந்தார்கள் திரிபுரத்தின் தலைவர்கள். பிறருக்குக் கொடுமை உண்டாகும்படி அந்தப் புரங்களைப் பறக்க விட்டுப் பிறகு நிலத்தின் மேல் படியச் செய்தார்கள்.

> கொடிது ஆக
> விண்டார்கள் மும்மதிலும்.

அந்த மூன்று புரங்களையும் கோபத்தினால் எரிக்கும் தன் மூன்று விழிகளாலும் பார்த்தான் சிவபெருமான். அந்தக் கண்களிலிருந்து தோன்றிய கனலால் மூன்று புரங்களும் எரிந்தன. அந்தக் கண்கள் அந்தப் புரங்கள் எரிவதைக் கண்டு அருளினால் பிறழ்ந்தன; அசைந்தன; ஆயின.

> கொடிதாக
> விண்டார்கள் மும்மதிலும்
> வெந்தீ யினில் அழியக்
> கண்டு ஆலும் முக்கணான் கண்.

அந்த மூன்று கண்களை நினைக்கிறார் அம்மையார். சூரிய சந்திர அக்கினிகளை முச்சுடர் என்பார்கள். இந்த மூன்றும் ஒளியைத் தருவன. கதிரவன் பகலிலும் சந்திரன் இரவிலும் தீ எக்காலத்திலும் இருளைப் போக்கி ஒளியைப் பரப்புவன. தீ விளக்கு வடிவத்தில் நின்று இருளைப் போக்குகிறது.

இந்த மூன்று சுடர்களுமே இறைவனுக்குக் கண்களாக அமைந்திருக்கின்றன. இந்த மூன்றும் இல்லாவிட்டால் உலகில் இருளே நிரம்பியிருக்கும். இயல்பாக இருண்டு கிடப்பது உலகம். 'மாயிருள்ஞாலம்', 'இருள்தருமா ஞாலம்' என்று இதைச் சொல்வார்கள். அந்த இருளைப் போக்குவதற்கு முச்சுடர்களும் பயன் படுகின்றன. அவை ஒளிராவிடின் உலகம் இருளில் மூழ்கும். மக்கள் கண்களைப் படைத் திருந்தாலும் இருளில் பொருள்களின் வடிவத் தையும் வண்ணத்தையும் தெரிந்துகொள்ள முடியாது. உலகத்தினர் கண் விழித்தாலும் இறைவன் கண் விழித்தாலன்றி அவர்கள் கண்கள் எதையும் காண முடியாது. அதாவது, சூரிய சந்திர அக்கினிகள் இருந்தாலன்றி ஒளி இல்லை; மக்களின் கண்கள் இருந்தும் பார்க்க முடியாது.

இறைவனுடைய மூன்று கண்கள் ஒளியை உடையவை. அதே சமயத்தில் அவை வெம்மையையும் உடையவை. உலகத்துக்கு ஒளியைத் தரும்போது, சில சமயங்களில் தீயவர்களை அழிப்பதற்கு அவை பயன்படும். அப்போது அவற்றின் வெம்மை செயற்படும்.

மூன்று கண்களை உடைய சிவபெருமானுக்கு மூன்று சுடர்களே கண்களாக உள்ளன. அவை தத்தமக்குரிய இயல்போடு இறைவன் திரு முகத்தில் ஒளிர்கின்றன. அவற்றைப் பார்த் தாலே, 'இவை மூன்று சுடர்களைப் போல இருக் கின்றனவே!' என்று சொல்லத் தோன்றும். உண்மையை அறியாதவரைப் போல அம்மையார் சொல்கிறார். மூன்று சுடரே அவன் கண்கள் என்னாமல், அவற்றைப் போலத் தோன்றும் என்று சொல்கிறார்.

உயர்ந்து கொழுந்து விட்டு எரியும் தீ இறை வனுக்கு ஒரு கண்.

நெடிதாய பொங்கு எரியும்.

குளிர்ந்த நிலவை வீசும் தண்ணிய மதியும் அவனுக்கு ஒரு கண்.

தண்மதியும்.

நேர் நின்றால் கடுமையாகச் சுடும் கிரணங் களை வீசும் கதிரவனும் ஒரு கண்.

நேரே

கடிதாம் கடுஞ்சுடரும் போலும்.

மும்மதில்களையும் சுட்ட மூன்று கண்களும் எப்போதும் எரியைக் கக்குவன அல்ல. அவை தத்தமக்கு உரிய இயல்போடு இருப்பவை. இறைவன் சினம் மூண்டு பார்க்கும்போது அவை மூன்றும் ஒரே திறத்தனவாக எரியைக் கக்கிச் சங்காரச் செயலுக்குக் கருவியாக இயங்குகின்றனவாம்.

நெடிதாய பொங்கெரியும்
தண்மதியும் நேரே
கடிதாம் கடுஞ் சுடரும்
போலும், – கொடிதாக
விண்டார்கள் மும்மதிலும்
வெந்தீ யினில் அழியக்
கண்டுஆலும் முக்கணான் கண்.

கொடுமை உண்டாக மற்றவர்களினின்றும் பிரிந்து சென்று பகைவர்களாக இருந்த திரிபுரத் தலைவர்களுடைய மூன்று மதில்களும் வெம்மையான தீயினால் அழியும்படி பார்த்து, அவை அழிந்தபிறகு மகிழ்ந்த முக்கண்ணனாகிய சிவபெருமானுடைய கண்கள், உயர்ந்ததாகிய கொழுந்து விடும் தீயையும், குளிர்ச்சியை யுடைய சந்திரனையும், நேரே கடுமையாக உள்ள வெய்ய கதிரவனையும் போல இருக்கும்.

[நெடிது ஆய—உயர்ந்ததாகிய; நெருப்பு மேல்நோக்கி எரிதலின் இவ்வாறு சொன்னார். பொங்கு எரி—கொழுந்து விட்டு எரியும் தீ. வேறு சுடர்களினும் நீக்குவதற்குக் கடுஞ்சுடர் என்றார். கடிதாம் கடுஞ்சுடர் என்று இரண்டு முறை சொன்னது அதன் கடுமை மிகுதியைச் சொன்னபடி. கடுஞ்சுடர் என்பதைச் சூரியன் என்னும் துணையாக நின்றது என்று கொண்டு பொருள் செய்வதும் பொருந்தும்.

கண் எரியும் மதியும் கடுஞ்சுடரும் ஆம் என்று பயனிலையை வருவித்து முடித்து, போலும் என்பதை அசையாகக் கொள்வதும் ஒன்று. கொடிது ஆக விண்டார்கள்; விண்டார்கள் என்பது பகைவர்களைக் குறிக்கும் சொல். இங்கே கொடிது ஆகும்படி பிரிந்து பகைத்த வர்கள் என்று பொருள் கொள்ள வேண்டும். கொடிதாகக் கண்டு என்று கூட்டி முடிப்பதும் பொருந்தும். வெந்தீ-ஐம்பூதங்களில் ஒன்றாகிய தீயைப் போலன்றி மிகக் கொடிதாகிய தீ. திரிபுரங்களின் ஆற்றல் மிக்கதாதலின் அதை அழிக்கும் வெம்மையை உடைய தீ ஆயிற்று.

கண்டு ஆலும்: முதலில் பார்த்து அழித்து அதன்பின்பு புரங்களை அழித்த பெருமிதத்தால் பிறழ்ந்தன. ஆலுதல்-அசைதல்; பிறழ்தல்; களித்தல் என்றும் கூறலாம். முக்கணான் என்பது சிவன் என்னும் துணையாய் நின்றது. 'முக்கணும் கண்' என்பது ஒரு பாடம்.

கண் போலும் என்று முடிக்க.]

இறைவனுடைய மூன்று கண்களின் இயல்பைச் சொன்ன இந்தப் பாடல் அற்புதத் திருவந்தாதியில் 84-ஆவது செய்யுளாக அமைந்தது. ※

இஸ்லாமியர் நடத்தும் மதமாற்றம்

விவேகானந்ததாசன்

புதுக்கோட்டை மாவட்டத்தில் புதுப்பட்டி பொன்னமராவதி என்ற கிராமம் அமைந்துள்ளது. இங்குள்ள இந்திரா நகரில் அரிஜன மக்கள் வாழ்ந்து வருகிறார்கள். இந்திரா நகர் சேரிவாழ் மக்களை இஸ்லாம் மதத்தைத் தழுவும்படி இஸ்லாமியர் ஆசைகாட்டியும் அச்சுறுத்தியும் கட்டாயப்படுத்தியும் வருகிறார்கள்.

தமிழ்நாடு, ஸ்ரீராமகிருஷ்ண—விவேகானந்தப் பேரவையின் தலைவர் டாக்டர் சண்முகம் F.R.I.C.S. அவர்கள் ஆகஸ்ட் 2-ஆம் நாள் அன்பர்கள் சிலருடன் புதுப்பட்டி பொன்னமராவதிக்குச் சென்று அங்குள்ள அரிஜன மக்களுடன் கலந்து பேசினார்.

அன்று மாலை சுமார் ஐந்து மணிக்குப் புதுப்பட்டி பொன்னமராவதி அரிஜன மக்களை ஒன்று திரட்டிக் கூட்டு வழிபாடு நடத்தப்பெற்றது. பஜனை, பக்திப் பாடல்கள் ஆகியவற்றைத் தொடர்ந்து நடைபெற்ற ஐக்கிய வழிபாட்டின் போது டாக்டர் சண்முகம் அவர்கள் ஹிந்து மதத்தின் மேன்மைகளை விளக்கி, இஸ்லாம் மதத்திற்கு மதம் மாறும் யோசனையைக் கைவிடும்படி கிராம மக்களைக் கேட்டுக் கொண்டார்.

சொற்பொழிவுக்குப் பிறகு, டாக்டர் சண்முகம், ஐக்கிய வழிபாட்டில் கலந்து கொண்ட அனைவரையும் அங்குள்ள நகரச் சிவன்கோவிலுக்கு அழைத்துச் சென்று வழிபாடு நடத்தினார். இந்த நிகழ்ச்சிகளில் கலந்து கொண்ட அனைவருக்கும் தயிர்சாதமும் சர்க்கரைப் பொங்கலும் சிவன் கோவிலில் பிரசாதமாக வழங்கப்பெற்றன.

டாக்டர் சண்முகம் அவர்கள் ஐக்கிய வழிபாட்டின்போது ஆற்றிய உரையின் ஒரு பகுதி வருமாறு :—

ஆயிரமாயிரம் ஆண்டுகளாக நம் முன்னோர்களால் கடைப்பிடிக்கப்பட்ட மதம் நமது ஹிந்துமதம்; இமாலய இன்னல்கள் தங்களைச் சூழ்ந்திருந்த காலங்களிலும் நமது மூதாதையர் ஹிந்துமதத்தை விட்டுப் பிற மதங்களைத் தழுவ ஒப்புக்கொள்ளவில்லை. அத்தகைய பரம்பரையில் வந்த நாம், நாம் பிறந்து வளர்ந்து பழகிய நம் ஹிந்து மதத்திலேயே உறுதிப்பாட்டுடன் இருப்பதுதான் பெருமைக்கு உரியதாகும். மதம் மாறுவது நம் முன்னோர்களையும் மகான்களையும் அவமானப்படுத்துவதாகும்; நம் மூதாதையருக்கும் ஹிந்து மதத்திற்கும் செய்யும் பெரிய துரோகமாகும்.

இங்கே தாய்மார்கள் பெருந்திரளாகக் குழுமியிருக்கிறீர்கள். ஹிந்துப் பண்பாட்டின் உயர்ந்த சின்னமாக இருப்பவர் சீதாபிராட்டி. அவரது கணவரான ஸ்ரீராமபிரான் ஏகபத்தினி விரதம் கொண்டவராக விளங்கினார். அது போன்று தன் கணவர் ஏகபத்தினி விரதம் கொண்டவராகவே இருக்க வேண்டும் என்று ஒவ்வொரு ஹிந்துப் பெண்ணும் விரும்புகிறாள். ஏகபத்தினி விரதத்தைக் காற்றில் பறக்கவிட்டு விட்டு நகை பணம் துணிகள் போன்றவற்றைப் பெற்றாலும், அவை அனைத்தும் கணவர் தன்மீது செலுத்தும் அன்புக்கு, ஏகபத்தினி விரதத்திற்கு ஈடாகாது என்றே ஒரு ஹிந்துப் பெண் கருதுவாள்.

முஸ்லிம் மதம் நான்கு பெண்களை மணந்து கொள்ள அனுமதிக்கிறது. அந்த மதத்தில் இப்போது அவர்கள் இங்கே வந்து தருகிற துணிக்கும் இனிப்புக்கும் பணத்திற்கும் ஆசைப் பட்டுச் சேரப்போகிறீர்களா? இஸ்லாமிய மதத்தில் சேருவதனால் மூன்று சக்களத்திகளுடன் சேர்ந்து நீங்கள் வாழ நேரிடும். அப்படி நீங்கள் மூன்று சக்களத்திகளுடன்

சேர்ந்து வாழ விரும்புகிறீர்களா? ஹிந்துப் பெண், மூன்று சக்களத்திகளுடன் சேர்ந்து வாழ வேண்டும் என்ற நிலை எவ்வளவு இடையூறு என்பதையும் கேவலமானது என்பதையும் ஆழ்ந்து சிந்தித்துப் பார்க்க வேண்டும். திருமணமான ஒவ்வொரு ஹிந்துப் பெண்ணையும் இதுபற்றிச் சிந்தித்துப் பார்க்கும்படி கேட்டுக் கொள்கிறேன்.

தங்கள் மதத்திற்கு இழுக்க வேண்டும் என்பதற்காக இஸ்லாமியர் மேலைநாட்டுத் துணிகள், ஹாங்காங்கில் தயாரிக்கப்பட்ட சாக்லேட் போன்றவற்றை ஹிந்து அரிஜனங்களுக்குத் தருகிறார்கள். இந்த நிலையற்ற பொருள்களுக்காக, 500 ரூபாய் பணத்திற்காக, சநாதனமாக விளங்கும் ஹிந்து மதத்திலிருந்து விலகி, இஸ்லாம் என்ற பெயரில் இப்போது நடந்து வரும் மதமாற்ற மோசடிக்குப் பலியாகி விடாதீர்கள்.

ராமேசுவரத்தில் ஹிந்து மீனவர்களைப் போலவேதான் கிறிஸ்தவ மீனவர்களும் வறுமையில் இருக்கிறார்கள். அந்தக் கிறிஸ்தவ மீனவர்கள் கடந்த தலைமுறையில் ஹிந்துக்களாக இருந்தவர்கள். அந்தக் கிறிஸ்தவ மீனவர்களோடு பேசிப் பார்த்தால், "நாங்கள் ஹிந்துக்களாக இருந்தபோது கிறிஸ்தவ மதத்தினர் ஆசை வார்த்தைகளையும் வாக்குறுதிகளையும் கொடுத்தனர். நாங்கள் கிறிஸ்தவ மதத்தைத் தழுவிய புதிதில் கிறிஸ்தவப் பாதிரிமார்கள் எங்களுக்கு உதவி புரிந்தனர். அந்த உதவிகள் ஆரம்ப காலத்தில் மட்டும் எங்களுக்குத் தரப்பட்டன. பிறகு அந்த உதவிகள் அறவே நின்றுவிட்டன. எனவே இப்போது நாங்கள் கிறிஸ்தவர்களாக இருப்பினும் பொருளாதாரத்தில் எங்கள் நிலையும் ஹிந்து மீனவர்களின் நிலையும் ஒன்றுபோலவே இருக்கின்றன" என்று கூறுகிறார்கள்.

இதை இங்கே கூறுவதற்குக் காரணம், இஸ்லாமியர் தங்கள் மதத்திற்கு ஹிந்துக்களை இழுப்பதன்மூலம் பாரதநாட்டை இஸ்லாமிய நாடாக்க வேண்டும் என்ற எண்ணத்தில் இப்போது அரிஜன ஹிந்துக்களுக்குப் பணம் தந்து ஆசை காட்டுகிறார்களே தவிர, மதம் மாறுபவர்களுக்குக் காலமெல்லாம் இஸ்லாம் பணம் கொடுத்துக்கொண்டிருக்காது என்பதை அரிஜன ஹிந்துக்கள் புரிந்துகொள்ள வேண்டும்.

ஹிந்து மதத்தில் இருப்பதைப் போன்ற உயர்ந்த கொள்கைகளும் பண்பாடும் பாரம்பரியமும் வேறு எந்த மதத்திலும் இல்லை. ஆகவே நிலையில்லாததான பணத்திற்காக மதம் மாறுவது கூடாது; அப்படி மதம் மாறுவது என்ற எண்ணமே மனதில் தோன்றுவதற்கு நீங்கள் இடம் தரக்கூடாது.

நமது ஹிந்து மதமே நம் தாய். நம்மை ஈன்றெடுத்த தாயை எவராவது மானபங்கப் படுத்தினால் நாம் எப்படிக் கொதித்து எழுவோமோ, அது போலவே நமது மதத்தைச் சீர்குலைக்கச் செய்யும் முயற்சிகளை நாம் கண்டிப்பாக எதிர்த்துப் போராட வேண்டும்.

ஹிந்துப் பண்பாட்டை விளக்கும் ராமாயணத்திலிருந்து மீண்டும் உங்களுக்கு உதாரணம் சொல்ல விரும்புகிறேன். ஸ்ரீராமபிரான் தம்பி பரதன் அரசாளட்டும் என்று ராஜ்யத்தை விட்டுக் கொடுக்கிறார். இதை அறிந்த பரதன், 'ராஜ்யம் எனக்கு வேண்டாம், ஸ்ரீராமர்தாம் பட்டத்துக்கு வர வேண்டும்' என்று சொல்லித் தனக்குக் கிடைத்த ராஜ்யத்தை விட்டுக் கொடுக்கிறான். ராமாயணத்தின் இறுதியில், ஸ்ரீராமர் திரும்பாததைக் கண்ட பரதன், தீக்குளிக்க எண்ணுகிறான். அப்போது பரதன், சத்துருக்கினனை அயோத்தி ராஜ்யத்தை ஏற்றுக்கொள்ளும்படி வேண்டுகிறான். சத்துருக்கினனும் ராஜ்யத்தை ஏற்றுக்கொள்ள மறுத்துவிடுகிறான். இவ்விதம் தானாகத் தனக்கு வந்து சேரும் ராஜ்யத்தை ஒவ்வொருவரும் வேண்டாம் என்று மறுத்துவிடுகிறார்கள். இதுதான் ஹிந்துப் பண்பாடு. இந்தத் தியாக உணர்ச்சியே ஹிந்துப் பாரம்பரியமாக இருந்து வந்திருக்கிறது.

இதற்கு நேர்மாறாக இருப்பது முஸ்லிம் பண்பாடு. முஸ்லிம் வரலாற்றைச் சற்று நினைத்துப் பாருங்கள். தந்தையைக் கொன்றுவிட்டு மகன் பட்டத்துக்கு வருவான்; தன் சொந்தச் சகோதரனைக் கொன்றுவிட்டு மற்றொருவன் பட்டத்துக்கு வருவான்—இதுவே சுருக்கமாக முஸ்லிம் பண்பாடாகச் சரித்திரம் முழுவதிலும் காணப்படுகிறது. இதே சரித்

திரத்தைத்தான் பாகிஸ்தானில் பூட்டோ விஷயத்திலும், பங்களாதேஷில் முஜிப்பூர் ரஹ்மான் விஷயத்திலும் இன்று வரையிலும் பார்த்துக்கொண்டிருக்கிறோம்.

நியாயமாகப் பட்டத்திற்கு வர வேண்டிய தன் மூத்த சகோதரனை அல்லாவுதீன் கில்ஜி சிறைப்படுத்திவிட்டுத் தான் பட்டத்துக்கு வருகிறான். அப்போது அவன் தன் மூத்த சகோதரனை எப்படி நடத்தினன் என்பதை நினைத்துப் பாருங்கள். 'ஹிந்துக்களின் கோவில்கள் எங்கே கண்ணில் பட்டாலும் தரை மட்டமாக இடித்துத் தள்ளுங்கள்!' என்று கட்டளை பிறப்பித்து அதைச் செயற் படுத்திய ஔரங்கசீப்பின் கொடூரச் செயல்களை நினைத்துப் பாருங்கள். தனக்குப் பிடிக்காதவனைக் கல்லால் அடித்தே முஸ்லிம்கள் கொன்றிருக்கிறார்கள். இத்தகைய கொடூரச் செயல்கள் தாம் முஸ்லிம்களின் நாகரிகமாக, பண்பாடாக, வரலாறாக இருந்துகொண்டிருக்கிறது.

ஹிந்துப் பண்பாடு தியாகம் என்றால் முஸ்லிம் பண்பாடு பேராசை; ஹிந்துப் பண்பாடு அமைதி என்றால் முஸ்லிம் பண்பாடு போர் வெறி.

உன்னதமான ஹிந்துப் பாரம்பரியங்களை விட்டு, உயர்ந்த தமிழ்ப் பண்பாடுகளைக் காற்றில் பறக்க விட்டுவிட்டு, கொடூர மனப் பான்மைக்கே பிரசித்திபெற்ற இஸ்லாம் சமயத்தையா நீங்கள் 500 ரூபாய் பணத்திற்காக ஏற்றுக்கொள்ளப் போகிறீர்கள்?

முஸ்லிம் மதத்தில் 20-க்கும் மேற்பட்ட சாதிப் பிரிவுகள் இருப்பதாகச் சொல்கிறார்கள். இஸ்லாம் மதத்திற்கு மாறிய அரிஜனங்களை 'முஸ்லிம் பறையர்கள்' என்றுதான் முஸ்லிம்கள் சொல்கிறார்கள். எனவே இஸ்லாம் சமயத்தில் சேர்ந்துவிடுவதனாலேயே சமத்துவம் கிடைத்து விடும் என்பது வெறும் கண்துடைப்பே தவிர அதில் உண்மையே கிடையாது.

நாற்பது ஆண்டுகளுக்கு முன்பு இருந்ததை விட இப்போது தீண்டாமை எவ்வளவோ குறைந்து போயிருக்கிறது. இன்னும் இருபது ஆண்டுகளில் தீண்டாமை என்பது அறவே இல்லாமலும் போகப்போகிறது. பல நூற்றாண்டுகள் பொறுமையுடன் இருந்த நீங்கள், இன்னும் சில ஆண்டுகள் பொறுமையாக இருங்கள், தீண்டாமை ஒழிந்துவிடும். தீண்டாமை மின்னல் வேகத்தில் மறைந்துவரும் இந்தத் தருணத்தில் வெண்ணெய் திரண்டு வரும்போது தாழியை உடைப்பது போல் பிற மதத்தவர்களின் ஆசை வார்த்தைகளுக்குப் பலியாகி ஹிந்து மதத்தை விட்டுப் பிற மதங்களுக்குச் செல்லாதீர்கள்.

தீண்டாமை என்ற தீமை முழு அளவில் நீங்கவும், ஹிந்து மதம் செழித்தோங்கவும் ஹிந்துக்கள் அனைவரும் ஒன்றுபட்டுச் செயற் படுவோமாக.

செய்தி

※ மோர்வியில் ஸ்ரீராமகிருஷ்ண மிஷன் மேற்கொண்ட வெள்ள நிவாரணப் பணிகளின் ஓர் அங்கமாக 250 வீடுகள், ஒரு பிரைமரிப் பள்ளி, ஒரு நடுநிலைப் பள்ளி ஆகியவை கட்டி முடிக்கப்பெற்றன. அவற்றை வெள்ளத்தினால் பாதிக்கப்பட்ட மக்களுக்கு ஜூலை 27-ஆம் நாள் ஸ்ரீராமகிருஷ்ண மிஷன் வழங்கியது.

※ அரக்கோணம், ஸ்ரீராமகிருஷ்ண-விவேகானந்த மன்றத்தின் சார்பாக ராமர் கோவிலில் ஆகஸ்ட் 2 ஞாயிறன்று காலை 9-30 மணி முதல் 10-30 மணி வரை சுவாமி விபுதானந்தர் 'குருவும் சீடரும்' என்ற தலைப்பில் உரை நிகழ்த்தினார்.

※ ஜார்ஜ் டவுன், விவேகானந்தர் நூற்றாண்டு பெண்கள் உயர்நிலைப் பள்ளியில் ஆகஸ்ட் 12-ஆம் நாள் சுதந்திர தினம், ராமகிருஷ்ணானந்த ஜயந்தி, தமிழ் ஆங்கிலக் கலைக் கழகங்களின் துவக்க விழா ஆகியவை அனைத்தும் சேர்ந்த நிகழ்ச்சி விமரிசையாக நடந்தேறியது. மாணவியரின் சொற்பொழிவுகளையும், கலை நிகழ்ச்சிகளையும் தொடர்ந்து சுவாமி கமலாத்மானந்தர் தலைமையுரை வழங்கினார்.

சில யோசனைகள்

ஹிந்து சமய மாநாடு, ஹிந்து சமய வளர்ச்சிக்காகச் செய்ய வேண்டிய பலவேறு பணிகள், செயல் திட்டங்கள் வகுத்தல் சம்பந்தமாகத் தமிழக ஹிந்து சமய அறநிலைய ஆட்சித்துறை ஆகஸ்ட் 12-ஆம் நாள் ஓர் ஆலோசனைக் கூட்டம் நடத்தியது.

இந்த ஆலோசனைக் கூட்டத்தில் ஹிந்து சமய அறநிலைய ஆட்சித்துறையின் ஆணையர் திரு யு. சுப்பிரமணியன் அவர்களின் அழைப்பிற்கு இணங்கி, தமிழகத்தில் உள்ள எல்லா மடங்களின் பிரதிநிதிகளும் இந்து சமய அறிஞர்களும் சேர்ந்து சுமார் 50 பேர் கலந்து கொண்டனர்.

ஆலோசனைக் கூட்டத்தில் பல கோணங்களில் பல கருத்துக்கள் விவாதிக்கப்பெற்றன.

'ஹிந்து சமய எழுச்சி மாநாடு' என்ற தலைப்பில் திருச்சியில் செப்டம்பர் அல்லது அக்டோபர் மாதத்தில் ஒரு மாநாடு நடத்துவது என்று ஆலோசனைக் கூட்டம் முடிவு செய்தது.

ஆலோசனைக் கூட்டத்தில் ஸ்ரீராமகிருஷ்ண மடத்தின் சார்பாக சுவாமி அவ்யயானந்தர், சுவாமி தன்மயானந்தர், சுவாமி கமலாத்மானந்தர் ஆகியோர் கலந்துகொண்டனர்.

ஆலோசனைக் கூட்டத்தில் சுவாமி தன்மயானந்தரும் சுவாமி கமலாத்மானந்தரும் ஸ்ரீராமகிருஷ்ண மிஷனின் சமய, சமுதாயக் கொள்கைகளை விளக்கிப் பேசினர்.

ஸ்ரீராமகிருஷ்ண மடத்தின் சார்பாக ஆலோசனைக் கூட்டத்தில் சுவாமி கமலாத்மானந்தர் தெரிவித்த கருத்துக்களில் சில கீழே தரப்பெறுகின்றன. இதன் ஒரு பிரதி ஆலோசனைக் கூட்டத்திலேயே ஹிந்து சமய அறநிலைய ஆட்சித்துறையின் ஆணையர் யு. சுப்பிரமணியன் அவர்களிடம் கொடுக்கப்பட்டது.

1. கோயில் நிலங்களை வருஷந்தோறும் ஏலத்தின் மூலம் குத்தகைக்கு விட வேண்டும்.

2. முன்பாக்கியை முழுவதும் கணக்குத் தீர்க்காதவர்கள் ஏலம் கேட்க அனுமதி மறுக்கப்பட வேண்டும்.

3. பினாமி ஏல வாய்ப்பு இல்லாத ஒரு முறையை அமலாக்க வேண்டும்.

4. ஏலம் கேட்டுப் பயனடைவதில் பின் தங்கிய வகுப்பினருக்கு முதல் சலுகையும் அதிகச் சலுகையும் அளிக்கப்பட வேண்டும்.

5. நிலங்களை ஆர்ஜிதம் செய்ய உச்ச வரம்பு அமலாக்கப்பட்டிருப்பது போல், குத்தகை எடுக்கும் நிலப்பரப்புக்கும் உச்சவரம்பு நிறுவுவதன்மூலம் அதிக நபர்கள் குத்தகை பெறும் வாய்ப்பு நிறுவப்பட வேண்டும்.

6. உச்சவரம்பு நிலம் சொந்தமாக உள்ளவர்களுக்குக் கோயில் நிலங்கள் குத்தகைக்குக் கிடையாது என்ற கட்டுப்பாட்டை நிறுவ வேண்டும்.

7. கோயில் நிலங்களின் விளைச்சலிலிருந்து கோயிலின் உபயோகத்திற்குத் தேவையானது போக, உபரி தானியம் அந்த அந்த ஊரில் வாழும் அரிஜனங்களுக்குக் குறிப்பிட்ட அளவு சலுகை விலையில் கிடைக்க வகை செய்ய வேண்டும்.

8. ஒவ்வோர் ஊரிலும் அரிஜனங்களுக்கும் வறுமைக் கோட்டின் கீழ்மட்டத்திலுள்ள மக்களுக்கும் அவர்கள் வாழும் பகுதியிலேயே அரசாங்க மானியம் பெற்ற சிற்றுண்டி விடுதியில், உணவு வகைகள் சலுகை விலையில் வழங்கப்பட வேண்டும்.

9. கோயில் பிரசாதங்கள் வியாபார ரீதியில் விற்கப்படாமல், சலுகை விலையில் மேற்குறிப்பிட்ட மக்களுக்கே விற்கப்பட வேண்டும்.

10. கோயில் நிலங்களைக் குத்தகைக்கு எடுப்போர் அந்த அந்த ஊரிலுள்ள மேற்குறிப்பிட்ட இரண்டு நிலை மக்களையே நியாயமான அதிக அளவு கூலியில் அமர்த்திக்கொள்ள வேண்டும். அந்த அந்த ஊரிலுள்ள இந்த இரண்டு மட்டத்து மக்களை முழுமையாக அமர்த்திக் கொண்டது போக, மேலும் ஆட்கள் தேவை ஏற்பட்டால் மட்டுமே இதர மட்டத்து மக்களைப் பயன்படுத்தலாம் என்ற கட்டுப்பாடு அமலாக வேண்டும். இந்தக் கட்டுப்பாடுகள் கோயில் நிலங்களைக் குத்தகைக்கு எடுப்போருக்கு உரிய விதிமுறைகளில் இடம் பெற வேண்டும்.

11. ஆலயம் செல்வது போக, அரிஜனங்கள் வாழும் பகுதியிலும் அவர்களே சிறு கோயில் கட்டிக்கொண்டு, அவர்களே நிர்வாகம் செய்து, அவர்களே ஆராதனை செய்யும் வாய்ப்பை உண்டாக்கி ஊக்குவிக்க வேண்டும்.

12. தேவாரம், திருவாசகம், திவ்யப் பிரபந்தம், திருக்குறள் போன்றவற்றை அவர்களுக்குச் செவ்வனே கற்றுத்தர அரசு தனி ஊக்கம் காட்ட வேண்டும். அவர்களது கோயிலை ஒட்டிய சிறு கல்விச்சாலை, சிறு மருத்துவச்சாலை அரசாங்கப் பராமரிப்பில் இலவசமாக இயங்குவதோடு, இந்த அமைப்பை யொட்டிய அத்தியாவசியப் பண்டங்கள், துணி வகைகள் கிடைக்கும் நியாய விலைக் கடையும் நிறுவ வேண்டும்.

13. உடனடியாய் ஓரிரு அரிஜன IAS நபர்கள் ஆலயங்களில் எக்ஸிக்யூடிவ் ஆபீசராக் கப்பட வேண்டும்.

14. அரிஜனக் கலப்பு மணங்களில் மண மக்களுக்கு Cash அவார்டாகத் தரவேண்டும். பொருளாகக் கொடுக்கத் தேவையில்லை.

15. ஹிந்து அறநிலைய ஆட்சித்துறை ஹிந்து சமுதாயத்தின் உயர் அறக்கட்டளையாகவும், அதன் அதிகாரிகளும் சிப்பந்திகளும் அந்த அறக் கட்டளையின் அங்காவலர்களாகவும் மட்டுமே செயற்பட வேண்டும். அரசியல் கட்சி, அரசாங்க அல்லது தன் சொந்த விருப்பு வெறுப்புகள் தலையிடாமல், எந்த உயர்நோக் கங்களுக்காக ஹிந்து அறக்கட்டளைகள் ஏற்படுத் தப்பட்டனவோ அவற்றிற்காக மட்டுமே ஹிந்து அறநிலைய ஆட்சித்துறை செயற்பட வேண்டும். மதச் சார்பற்ற தன்மை அரசாங்கக் கொள்கை யானாலும், அது ஹிந்து அறக்கட்டளைகளின் நோக்கம் அல்ல. இந்தத் துறை ஹிந்து எண்ணங்களை வளர்ப்பதற்கும் உயர்த்து வதற்கும் ஆவன செய்ய வேண்டும். ※

செய்தி

※ ஸ்ரீராமகிருஷ்ண சேவா சங்கத்தின் ஆதரவில் ஜுலை 26-ஆம் நாள் ஞாயிற்றுக் கிழமை, அடையாறு ஸ்ரீஅனந்தபத்மநாப ஸ்வாமி கோவிலில் 'ஸ்ரீராமகிருஷ்ணர் தினம்' சிறப்பாகக் கொண்டாடப்பெற்றது.

காலை 9 மணியிலிருந்து 11 மணி வரை விசேஷ பூஜை, ஹோமம், பஜனை, பகவத்கீதை பாராயணம் ஆகியவை இடம் பெற்றன. நிகழ்ச்சிகளில் கலந்துகொண்ட சுமார் ஐந்நூறு பேருக்குப் பிரசாதம் வழங்கப்பட்டது.

விழாவின் ஓர் அங்கமாக ஔவை இல்லம், விச்ராந்தி முதியோர் இல்லம் ஆகியவற்றைச் சேர்ந்தோருக்குப் பகலுணவு வழங்கப்பெற்றது.

மாலை 5-30 மணிக்குத் துவங்கிய பொதுக் கூட்டத்திற்கு சுவாமி தபஸ்யானந்தர் தலைமை வகித்துத் தலைமையுரை வழங்கினர். அவரது உரையைத் தொடர்ந்து முன்னாள் மத்திய அமைச்சர் சி. சுப்பிரமணியம் சிறப்புரை யாற்றினர்.

ஸ்ரீராமகிருஷ்ணர், ஸ்ரீஅன்னையார், ஸ்ரீவிவே கானந்தர் ஆகியோரின் அருள்மொழிகள் அடங்கிய சிறு பிரசுரத்தை இந்திய வங்கியின் தலைவர் எம். வி. சுப்பாராவ் வெளியிட்டார்.

இந்த விழாவையொட்டி, பத்தாம் வகுப்பு மாணவ மாணவிகளுக்கு ஜுலை 12-ஆம் நாள் கட்டுரைப் போட்டி நடத்தப்பெற்றது. 45 பள்ளிகளிலிருந்து 146 பேர் கட்டுரைப் போட்டி யில் கலந்து கொண்டனர். முதல் மூன்று பரிசுகளைத் தவிரவும் மற்றும் 17 பேருக்குச் சிறப்புப் பரிசுகள் வழங்கச் சேவா சங்கம் முடிவு செய்தது.

கட்டுரைப் போட்டியில் வெற்றி பெற்ற மாணவ மாணவிகளுக்கு விழாவில் சுழல் கேடயமும் பரிசுகளும் வழங்கப்பெற்றன.

அன்று இரவு சுமார் 7-30 மணிக்கு 'ஸ்ரீராம கிருஷ்ணர் வரலாறு' திரைப்படம் திரையிடப் பெற்றது.